
# மாணவர் கையேடு
# 2024



**சித்த மருத்துவபீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**கைதடி, இலங்கை.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

# மகுடவாசகம்

## "மெய்ப்பொருள் காண்பது அறிவு"

### தூரநோக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நோக்கு கற்பித்தல், கற்றல், ஆய்வு மற்றும் புலமைத்துவத்தில் தலையாயதாய் ஒரு உன்னத மையமாகத் திகழ்வதாகும்.

### பணிக்கூற்று

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பணியானது அறிவார்ந்த புலமை, தொழில்சார்தகுதி மற்றும் செயலூாக்கம் கொண்ட பட்டதாரிகளை உயர்தர கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வுகளுடாக தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தில் எழுந்து வரும் தேவைகளுக்கு முகங்கொடுக்க கூடியதாகவும் சிறப்பாக வட இலங்கையின் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டுத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும் உருவாக்கும் முன்னணிப் புலமைத்துவ மையமாகத் திகழ்வதாகும்.

# சித்த மருத்துவ பீடம்

## தூரநோக்கு

சித்த மருத்துவத்தின் நோக்கு கற்பித்தல், கற்றல், ஆய்வு மற்றும் புலமைத்துவத்தில் தலையாயதாய் ஒரு உன்னத மையமாகத் திகழ்வதாகும்.

## பணிக்கூற்று

சித்த மருத்துவத்தின் பணியானது போதிய அறிவு, தொழில்சார் திறமையுடன் தேசிய சுகாதார பாதுகாப்பினை மேம்படுத்தும் தகுதிவாய்ந்த சித்த மருத்துவர்களை உருவாக்குவதுடன் சித்த மருத்துவத்தில் ஆய்வுகள், கண்டுபிடிப்புக்கள், சமூக பொருளாதார, ஆன்மீகத்தில் சிறப்பான கலாச்சார பாரம்பரிய பின்னணியினை உருவாக்குதல்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தின் 2022/2023 ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் வருட சித்த மருத்துவ புதுமுக மாணவர்களின் வருகையை முன்னிட்டு சித்த மருத்துவ பீடத்தினால் தயாரிக்கப்பட்ட மாணவர் கையேட்டுக்கான ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்த மருத்துவம் என்பது பலவித சித்துக்களைப் கைவரப் பெற்ற சித்தர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான இயற்கை மருத்துவமாகும். சித்த மருத்துவத்தின் தந்தையாக - அமர முனியாகிய அகத்தியர் போற்றப்படுவதுடன், அவரே தமிழர் வாழ்வியலை மேம்படுத்தி அரிய பங்களித்த முனிவர் என்றும், சித்த மருத்துவ முறைகளை வழங்கிய முனிவர் என்றும் குறிப்பிடப்படுகின்றார். மக்கள் என்றும் நரை, திரை, பிணியின்றி நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வதற்குத் தேவையான உபாயங்களைத் தொகுத்து ஏட்டு முறையில் தமது சீடர் பரம்பரையின் ஊடாக ஒரு அரும்பெரும் பொக்கிஷமாக வழங்கியுள்ளார். ‘‘உணவே மருந்து - மருந்தே உணவு’’ எனும் கூற்றுக்கேற்ப, தமிழர்களுக்கே உரித்தான சித்த மருத்துவமானது, இயற்கை சார்ந்து மனித வாழ்வில் உடல் உள ஆரோக்கியம், சமயம் மற்றும் கலாசாரத்துடனும் பிண்ணிப் பிணைந்துள்ளது.

ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கீழ் ஒரு துறையாக உள்வாங்கப்பட்டு, பல சித்த மருத்துவர்களை உருவாக்கி படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகின்ற இவ்வேளையில் சித்த மருத்துவ அலகானது, சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டு, அதன் சேவை மென் மேலும் விஸ்தரிக்கப்பட எல்லாம் வல்ல இறையருள் கைகூடியுள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க சித்த மருத்துவத்தின் 2022/2023 ஆம் கல்வி ஆண்டுக்குள் உள் நுழையும் முதலாம் வருட மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் விதிமுறைகளை நன்கு தெரிந்து, குடியியல் சமூகத்தின் நியமங்களுக்கு இணங்க சக மாணவர்களுடனும், ஆசிரியர் குழாத்துடனும் இணங்கி நடப்பதுடன், சமூகத்தில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து சிறந்த முறையில் கல்வி கற்று ஒரு சிறந்த சித்த மருத்துவராக வெளியேறி மக்களின் நல்வாழ்விற்காகவும், உடல் உள ஆரோக்கியத்திற்காகவும் சேவை செய்வதற்கு நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இம் மாணவர் கையேட்டினைத் தயாரிப்பதற்கு உதவிய சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே!

**பேராசிரியர்.சி.சிறிசற்குணராசா,**
**துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## சித்த மருத்துவ பீடாதிபதியின் ஆசிச்செய்தி



2022/2023 கல்வியாண்டிற்கான சித்த மருத்துவ பீடத்தின் மாணவர் கையேட்டிற்கான ஆசிச்செய்தி வழங்குவதில் பீடாதிபதியாக நான் மகிழ்ச்சியடைகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடமானது 2024 ஆம் ஆண்டு ஆடி மாதம் 26ம் திகதி சித்தமருத்துவ அலகிலிருந்து பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட பின்னரான சித்த மருத்துவ பீடத்தின் முதலாவது அணி மாணவர்களாகிய உங்களை நான் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். சித்த மருத்துவ பீடமானது திறமையான பட்டதாரிகளை உருவாக்குதல், சித்த வைத்தியர்களை உருவாக்குதல், அதிநவீன ஆராய்ச்சி நடத்துதல், அறிவு மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளைப் பரப்புதல் மற்றும் பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய நிலையான சித்தமருத்துவத்தை மேம்படுத்தல் என்ற நோக்கத்துடன் ஒரு தனித்துவமான பட்டப்படிப்பை வழங்குகின்றது. சித்த மருத்துவ (பி.எஸ்.எம்.எஸ்) பட்டப்படிப்பு திட்டம், இலங்கை தகுதி கட்டமைப்பின் (SLQF) 6 இனைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தின் நிர்வாக அமைப்பு, கிடைக்கக்கூடிய வளங்கள், மாணவர் கடமைகள் மற்றும் பொறுப்புகள், அடிப்படை பாடத்திட்டம், தேர்வு விதிமுறைகளுடன் இந்த மாணவர் கையேடு தொகுக்கப்பட்டுள்ளது. மாணவராக உங்கள் முக்கிய கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள், மேலும் கல்வி செயற்பாடுகள் தவிர்ந்த கலை, கலாச்சார நிகழ்வுகளில் பங்கேற்று உங்கள் திறனை வெளிப்படுத்துங்கள். மாணவர்கள் இந்த கையேட்டின் மூலம் அனைத்து ஆதரவையும் பெறுவார்கள். மேலும் அவர்களுக்கு மேலும் தெளிவுபடுத்தல் தேவைப்பட்டால், அவர்கள் மாணவர் ஆலோசகர்கள், மாணவர் ஒழுங்கு அதிகாரி, விரிவுரையாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பீடாதிபதியினைத் தொடர்பு கொள்ளலாம். சித்த மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்கள் தரமான கற்பித்தல், செய்முறைப்பயிற்சி, மருத்துவப்பயிற்சி மற்றும் களப்பிரயாணம் மூலம் பெறப்பட்ட விரிவான கல்வி, செய்முறை அறிவு மற்றும் நடைமுறை திறன்களைக் கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, சிறந்த மாணவர்களை மையமாகக் கொண்ட கற்பித்தல் மற்றும் கற்றல் வசதிகள் மற்றும் சூழலை வழங்குவதற்கும், மாணவர்கள் அனைத்து பாடநெறி நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்க ஒரு தளத்தை வழங்குவதற்கு சித்த முருத்துவ பீடம் உறுதிபூண்டுள்ளது. இருப்பினும், மாணவர்கள் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் சுயமாக விதிக்கப்பட்ட ஒழுக்கத்தை பராமரிக்க வேண்டும், இவை இரண்டும் வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் அவசியம். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையின் இந்த புதிய கல்வி அத்தியாயத்தில் இறங்கும்போது அவர்களுக்கு நல்வாழ்த்துக்கள் கூறுவதோடு அவர்களின் எதிர்கால முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

**வைத்தியகலாநிதி (திருமதி). விவியன் சத்தியசீலன்**
**பீடாதிபதி, சித்த மருத்துவபீடம்.**

# பல்கலைக்கழகத்தின் இலச்சினை

சுமார் 16ஆம் 17ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் நிலவிய யாழ்ப்பாண இராச்சியத்தின் கொடியிலிருந்து புனித பசுவின் (நந்தி) உருவம் வந்தது. பாரம்பரிய விளக்கு என்பது ஞானத்தின் வெளிச்சத்தைக் குறிக்கிறது. இப் பொன்மொழி புகழ்பெற்ற தமிழ் இலக்கியமான திருக்குறளிலிருந்து வருகிறது. ''ஞானம் சத்தியத்தின் வெளிப்பாடாகும்'' தமிழ் கலாச்சாரத்தில் உள்ள 64 கற்கும் கலைகளையும் வெளி வட்டத்தின் தீப்பிழம்புகள் குறிக்கின்றன.

குறள் 355 அதிகாரம் - மெய்யுணர்தல்

''எப்பொருள் எத்தன்மையாயினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

குறள் 423 அதிகாரம் - அறிவுடைமை

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு''

# உள்ளடக்கம்

1. அறிமுகம்

1.1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1.2 சித்தமருத்துவபீடம்

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

2.1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள்

2.2 சித்தமருத்துவ பீடத்தின் நிர்வாகக் கட்டமைப்பு
2.3 சித்தமருத்துவ மாணவ நலன்சார் கட்டமைப்பு
2.4 சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம்
2.5 சித்தமருத்துவ பீட மாணவர் விடுதி

3. சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி

3.1 சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி கற்கை நெறியின் விபரம்
3.2 சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி கற்கை நெறியின் பாடவிதான அட்டவணை

4. சித்த மருத்துவ மாணவர்களுக்கான அடிப்படை விதிமுறைகள்

5. சித்த மருத்துவ பரீட்சை விதிமுறைகளும் மதிப்பீட்டு முறைகளும்

6. நூலகம்

7. கல்விச் சேவையும் மாணவர்நலச்சேவையும்

8. பின்னிணைப்புக்கள்

9. முக்கிய தொலைபேசி இலக்கங்கள் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| **முகவரி:** | சித்தமருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கைதடி. யாழ்ப்பாணம் - 40000. இலங்கை. |
| **மின்னஞ்சல்:** | deansiddha@univ.jfn.ac.lk<br>drsiddha@univ.jfn.ac.lk |
| பீடாதிபதி, சித்த மருத்துவபீடம் | வைத்தியகலாநிதி (திருமதி). விவியன் சத்தியசீலன் deansiddha@univ.jfn.ac.lk |
| பீடாதிபதி அலுவலகம், சித்த மருத்துவபீடம் | 0212057146 |
| பிரதிப்பதிவாளர், சித்த மருத்துவ பீடம் | திரு. சூசைப்பிள்ளை எட்வேட் றெஜினோல்ட் drsiddha@univ.jfn.ac.lk |
| பிரதிப்பதிவாளர் அலுவலகம், சித்த மருத்துவ பீடம் | 0212232629 |
| துறைத்தலைவர், மூலதத்துவம் | வைத்தியகலாநிதி. (திருமதி) சுஜிதசாயி கிருஷ்ணா headdmt@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், குணபாடம் | வைத்தியகலாநிதி. (திருமதி) வித்தியா மிலானோ பிரசாத் headdgp@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், நோய்நாடல் சிகிச்சை | வைத்தியகலாநிதி. (திருமதி) கலைச்செல்வி சௌந்தரராஜன் headdnc@univ.jfn.ac.lk |

| | |
|---|---|
| துறைத்தலைவர், குழந்தை மற்றும் மகளிர் மருத்துவம் | வைத்தியகலாநிதி. (திருமதி) சைலஜா சிவராஜா headdkmm@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், சிரோரோகம் மற்றும் அறுவை மருத்துவம் | வைத்தியகலாநிதி. (செல்வி) சிவரஞ்சினி சிவஞானம் headdsa@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், சமூகநல மருத்துவம் | வைத்தியகலாநிதி. (திருமதி) தயாளினி திலீபன் headdsnm@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், மனித உயிரியல் | வைத்தியகலாநிதி. (திருமதி) நவலக்ஷ்மி நித்தியகுமார் headdmu@univ.jfn.ac.lk |
| துறைத்தலைவர், நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம் | வைத்தியகலாநிதி. (செல்வி) வினோதா சண்முகராஜா headdnp@univ.jfn.ac.lk |

# 1. அறிமுகம்

## 1.1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1974ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாகவும், வடமாகாணத்தின் உயர் கல்விக்கான முக்கிய மையமாகவும், தமிழ் பேசும் சமூகத்தின் கல்வி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டது. 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண வளாகமானது சுதந்திர சுயாதீன தேசிய பல்கலைக்கழகமாக 1979ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி யாழ்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் யாழ்ப்பாண வளாகமானது விஞ்ஞான பீடம் மற்றும் மனித பண்பியல் பீடம் ஆகிய 2 பீடங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது இலங்கையிலுள்ள மிகப்பெரிய பல்கலைக்கழகங்களில் ஒன்றாக விளங்குவதுடன் 12 பீடங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பிரதான வளாகத்தில் 9 பீடங்களும், கிளிநொச்சி அறிவியல் நகரில் 3 பீடங்களும் காணப்படுகிறது. தற்போது இளமானி பட்டப்படிப்பு மாணவர்களும் 875 முதுமானி பட்டப்பின்படிப்பு மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் கல்வி பயிலுகின்றார்கள்.

## 1.2 சித்தமருத்துவ பீடம்

1929ம் ஆண்டில் சித்தமருத்துவ துறையானது கொழும்பு பொரள்ளையில் சுதேச மருத்துவ கல்லூரியின் கீழ் ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவ துறைகளுடன் சேர்ந்து நிறுவப்பட்டது. ஐந்து வருட கற்கைநெறி மற்றும் ஒரு வருட உள்ளகப் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்களிற்கு சுதேச மருத்துவமும் அறுவை சிகிச்சையும் (DIMS) என்ற Diploma பட்டம் 1961 வரை வழங்கப்பட்டது. 1961ம் ஆண்டின் 31ம் இலக்க ஆயுர்வேத சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின்னர் இக் கல்லூரியின் பெயரானது ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி என மாற்றப்பட்டதுடன் கற்கைநெறியின் பட்டமானது ஆயுர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் (DAMS) என வழங்கப்பட்டது.

1977 சித்திரை 2ம் திகதி ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியானது சுதேச மருத்துவ நிறுவனமாக தரமுயர்த்தப்பட்டு கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1983ம் ஆண்டில் சித்தவைத்திய சத்திர சிகிச்சைமாணிக்கும் (BSMS) ஆயுள்வேத வைத்திய சத்திர சிகிச்சைமாணிக்கும் (BAMS) மற்றும் யுனானி வைத்திய சத்திர சிகிச்சைமாணிக்கும் (BUMS) முதலாவது அணி மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1983ம் ஆண்டு ஆடி மாதத்தில் நாட்டில் நிகழ்ந்த அசாதாரண சூழ்நிலைக்குப் பின் சித்தமருத்துவத் துறையானது 1984ம் ஆண்டு ஆடி மாதம் 2ம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இடமாற்றப்பட்டு கலைப்பீடத்தின் கீழ் ஒரு துறையாக பிரதான பல்கலைக்கழகத்திலிருந்து 11 km தொலைவிலுள்ள கைதடி பிரதேசத்தில் தனது கல்வி சார் நடவடிக்கைகளை நடாத்த ஆரம்பித்தது.

BSMS மாணவர்களின் முதலாவது அணியினதும் DAMS மாணவர்களின் இறுதி அணியினதும் விரிவுரைகள் கைதடியில் இடம்பெற்றன. மேலும் 1985ம் ஆண்டு சித்தமருத்துவ துறைக்கான 2வது அணிக்கான மாணவர்கள் (1984/1985) சேர்த்துக்கொள்ளப்பட்டனர். படிப்படியாக உடற்கூற்றியல், உடற்றொழிலியல், குணபாடம், மருந்தகம் என்பவற்றிற்கான ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டதுடன் மூலிகைத்தோட்டமும் உருவாக்கப்பட்டது.

மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் நலன் கருதி அவசியமான புத்தகங்கள் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் கொண்ட பிரதான நூலகத்தின் ஒரு கிளையானது இங்கு நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் போதுமான ஊழியர்கள் மற்றும் ஆய்வுகூட வசதிகள் இன்மையால் குறித்த சில விரிவுரைகளும், செய்முறை சார்ந்த வகுப்புக்களும் யாழ் மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது.

உள்நாட்டு அமைச்சின் கொள்கை தீர்மானத்திற்கு அமைவாக கைதடி அரசினர் ஆயுள்வேத மருத்துவமனையில் மாணவர்களின் செயன்முறை ரீதியானதும், சிகிச்சை ரீதியானதுமான கற்றல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

1990ம் ஆண்டு சித்தவைத்திய துறை யாழ்ப்பாணப் பல்கலைகழத்தின் வேண்டுகோளிற்கு அமைவாக சுதேச மருத்துவ அமைச்சினால் மாணவர்களின் நலனுக்காக கைதடி அரசினர் ஆயுள்வேத மருத்துவ மனையில் ஒரு மகப்பேற்றியல் விடுதி திறந்து வைக்கப்பட்டது. 1993ம் ஆண்டிலிருந்து சித்தமருத்துவத் துறையானது துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சித்தமருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்தது.
1999ம் ஆண்டு ஆண் மற்றும் பெண் விடுதிகளை சித்தமருத்துவ அலகிற்கு அருகாமையில் நிறுவுவதற்கு

நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2000ம் ஆண்டு தென்மராட்சிப் பகுதியில் நடைபெற்ற மோதலின் போது சித்தமருத்துவ அலகு மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன் கட்டிடங்கள் (இரண்டு புதிய மாணவ விடுதிக்கான கட்டிடங்கள் உட்பட) பல உபகரணங்கள் தளபாடங்கள் மற்றும் நூலக புத்தகங்கள் என்பன சிதைவடைந்தன. அதன் பின் 2000ம் ஆண்டு ஆனி மாதம் முதல் கார்த்திகை வரை சித்தமருத்துவ அலகானது யாழ்ப்பாண மருத்துவ பீடத்தில் தற்காலிகமாக அமைந்திருந்தது பின் மார்கழி மாதம் யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவர் மையத்திற்கு இடமாற்றப்பட்டது. 2001ம் ஆண்டு பங்குனி மாதம் கோவில் வீதியில் இரண்டு வீடுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வாடகைக்கு எடுக்கப்பட்டு அங்கு 2002ம் ஆண்டு ஆடி மாதம் வரை சித்தமருத்துவ அலகு இயங்கி வந்தது.

2002ம் ஆண்டு ஆடி மாதம் மீண்டும் கைதடியில் பகுதியாக புனர்நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தில் அலகு இயங்கத் தொடங்கியது. பின் ஆரம்பத்திலிருந்த ஆய்வுகூடங்கள், நூலகம், மருந்தகம், மூலிகைத் தோட்டம் போன்றவை படிப்படியாக மீள புனரமைக்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவிய போர் நிலைமை காரணமாக கைதடி ஆயுர்வேத மருத்துவமனை மோசமாக சேதமடைந்தது. இச்சூழ்நிலையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொறள்ளை, ஆயுர்வேத மருத்துவ மனையிலும் கொழும்பிலுள்ள பிற மருத்துவ நிறுவனங்களிலும் இறுதி வருட சித்தமருத்துவ மாணவர்களுக்கான மருத்துவப் பயிற்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

2005ம் ஆண்டு ஏனைய துறைகளில் அனுமதிப்பது போல சித்தமருத்துவத்திற்கும் பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழுவினால் (UGC) மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதற்கு முன்னர் க.பொ.த. உயர்தர உயிரியல் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சுதேசமருத்துவத்தின் வளர்ச்சிக்காகவும் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) சுதேச மருத்துவ நிலைக்குழு (Standing Committee on Indigenous Medicine) ஒன்று உருவாக்கப்பட்டது. இந்த குழுவில் சித்தமருத்துவ அலகின் தலைவர் ஒரு அங்கத்தவராக நியமிக்கப்பட்டார். இதன் மூலம் அலகினுடைய அபிவிருத்தியும் முன்னேற்றமும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் BSMS பட்டதாரிகள், இலங்கையிலுள்ள அரச ஆயுர்வேத, சித்த யுனானி மருத்துவமனைகள், ஏனைய சித்த நிறுவனங்களில் பணியாற்றுகின்றார்கள்.

சித்தமருத்துவ அலகை ஒரு பீடமாகத்தரமுயர்த்துவது தொடர்பான ஒரு முன்மொழிவை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அமைச்சரவைக்குப் பரிந்துரை செய்திருந்தது. அது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு 2024.07.26 வர்த்தமானியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் 8 துறைகளுடன் சித்தமருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

சித்தமருத்துவ பீடமானது தனது வளர்ச்சிப் படியில் தனது முன்னேற்றப் பாதையை நோக்கி பயணிப்பதுடன், அனைவரும் BSMS பட்டப்படிப்பினை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய வழிவகுக்கின்றது.

# 2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

## 2.1 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள் பொது

| | |
|---|---|
| வேந்தர் | |
| துணைவேந்தர் | பேராசிரியர்.சி.சிறிசற்குணராஜா |
| பதிவாளர் | திரு.வி.காண்டீபன் |
| நிதியாளர் | திரு.க.சுரேஸ்குமார் |
| பதில் நூலகர் | கலாநிதி.(திருமதி).க.சந்திரசேகர் |
| பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம் | பேராசிரியர்.T.வேல்நம்பி |
| பீடாதிபதி, கலைப்பீடம் | பேராசிரியர்.S.ரகுராம் |
| பீடாதிபதி, விஞ்ஞான பீடம் | பேராசிரியர்.P.ரவிராஜன் |
| பீடாதிபதி,விவசாய பீடம் | பேராசிரியர்.K.பகீரதன் |
| பீடாதிபதி, முகாமைத்துவ கற்கையும் வணிகமும் பீடம் | பேராசிரியர்.N.கெங்காதரன் |
| பீடாதிபதி, மருத்துவ பீடம் | பேராசிரியர்.R.சுரேந்திரகுமரன் |
| பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம் | கலாநிதி.T.கேதீஸன் |
| பீடாதிபதி, பொறியியற்பீடம் | கலாநிதி.A.கணேஸ்வரன் |
| பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம் | திரு.S.பத்மநாபன் |
| பீடாதிபதி, இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம் | திருமதி.D.தபோதரன் |
| பீடாதிபதி, சித்த மருத்துவ பீடம் | வைத்தியகலாநிதி (திருமதி). விவியன் சத்தியசீலன் |
| **பிரிவு அலகுகளின் தலைவர்கள்** | |
| | |
| பணிப்பாளர், உடற் கல்வி அலகு | திரு. க. கணேசநாதன் |
| பணிப்பாளர், திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையம் | திருமதி.ர.யோகேந்திராஜா |
| தலைவர், கணணிகள் அலகு | கலாநிதி.K.அனந்தகிருஸ்ணன் |

## 2.2 சித்தமருத்துவ பீடத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

சித்தமருத்துவ பீடமானது எட்டு துறைகளை உள்ளடக்கியுள்ளது.

**சித்தமருத்துவ பீடத்தின் துறைகளும் அவற்றின் பாடங்களும், தலைவர்களும், விரிவுரையாளர்களும்**

| **துறைகள்** | **பாடங்கள்** | **துறைத்தலைவர்** | **விரிவுரையாளர்கள்** |
|---|---|---|---|
| மூலதத்துவம்<br>*Moolathathuvam* | 1. சித்தமருத்துவ மூலதத்துவமும் உடற்கூற்றியலும்<br>2. சித்த உடல் தத்துவமும் உடற்தொழிலியலும்<br>3. சித்தமருத்துவ வரலாறும் உயர் தமிழும் | வைத்தியகலாநிதி. (திருமதி) சுஜிதசாயி கிருஷ்ணா | - |
| குணபாடம்<br>*Gunapadam* | 1. பதார்த்த குண விஞ்ஞானம்<br>2. மூலிகையியல்<br>3. தாதுஜீவவியல்<br>4. மருந்து | வைத்தியகலாநிதி. (திருமதி) வித்தியா மிலானோ பிரசாத் | வைத்தியகலாநிதி (திருமதி). விவியன் சத்தியசீலன்<br>வைத்தியகலாநிதி. (திருமதி) தயாளினி திலீபன்<br>வைத்தியகலாநிதி. (திருமதி) |

| | | | |
|---|---|---|---|
| | செய்முறையியல் | | நவலக்ஷ்மி நித்தியகுமார்<br>வைத்தியகலாநிதி. தவராசா விஜயகுமார்<br>வைத்தியகலாநிதி. (திருமதி) வித்தியா மிலானோ பிரசாத் |
| நோய்நாடல் சிகிச்சை *Noi Naadal Chikitsai* | 1. நோய்நாடல்<br>2. சிகிச்சை அடிப்படைத்தத்துவங்கள்<br>3. மேற்கத்தேய பிணியியல்<br>4. **மருத்துவம் :**<br>• வாதரோக மருத்துவம்<br>• பித்தரோக மருத்துவம்<br>• கபரோக மருத்துவம்<br>• உதரரோக மருத்துவம்<br>• சருமரோக மருத்துவம்<br>• சுரரோக மருத்துவம்<br>• உளரோக மருத்துவம் | வைத்தியகலாநிதி. (திருமதி) கலைச்செல்வி சௌந்தரராஜன் | வைத்தியகலாநிதி. (திருமதி) அன்புச்செல்வி ஸ்ரீதரன்<br>வைத்தியகலாநிதி. (செல்வி) வினோதா சண்முகராஜா<br>வைத்தியகலாநிதி. (திருமதி) கலைச்செல்வி சௌந்தரராஜன்<br>வைத்தியகலாநிதி. (திருமதி) சுஜிதசாயி கிருஷ்ணா<br>வைத்தியகலாநிதி. (திருமதி) இரகுலினி சுஜீவன் |

| | | | |
|---|---|---|---|
| குழந்தை மற்றும் மகளிர் மருத்துவம் *Kuzhanthai* and *Mahalir Maruthuvam* | 1. குழந்தை மருத்துவம்<br>2. மகளிர் மருத்துவமும் மகப்பேற்றியலும் | வைத்தியகலாநிதி. (திருமதி) சைலஜா சிவராஜா | வைத்தியகலாநிதி. (திருமதி) சைலஜா சிவராஜா<br>வைத்தியகலாநிதி. (திருமதி) நித்தியப்பிரியா சிவராம்<br>வைத்தியகலாநிதி. (திருமதி) ரஜிதா மிராஜ் |
| சிரரோகம் மற்றும் அறுவை மருத்துவம் *Sirorogam* and *Aruvai Maruthuvam* | 1. சிரோரோக மருத்துவம்<br>2. அறுவை மருத்துவம் | வைத்தியகலாநிதி. (செல்வி) சிவரஞ்சினி சிவஞானம் | வைத்தியகலாநிதி. (செல்வி) சிவரஞ்சினி சிவஞானம் |
| சமூகநல மருத்துவம் *Samooganala Maruthuvam* | 1. சமூகநலமருத்துவம்<br>2. பாரம்பரிய உணவும் ஆரோக்கியமும்<br>3. ஆய்வு அறிக்கை | வைத்தியகலாநிதி. (திருமதி) தயாளினி திலீபன் | |

| | | | |
|---|---|---|---|
| மனித உயிரியல்<br>*Manitha Uyiriyal* | 1. உயிர்இரசாயனம்<br>2. உடற்கூற்றியல்<br>3. உடற்தொழிலியல் | வைத்தியகலாநிதி. (திருமதி) நவலக்ஷ்மி நித்தியகுமார் | - |
| நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம்<br>*Nanchiyal* and *Paramparai Maruthuvam* | 1. நஞ்சியலும் நீதி மருத்துவமும்<br>2. பரம்பரை மருத்துவம் | வைத்தியகலாநிதி. (செல்வி) வினோதா சண்முகராஜா | வைத்தியகலாநிதி. (திருமதி) மன்சூர் நுஷ்ரத் றொஷானா |

## 2.3 சித்தமருத்துவ மாணவ நலன்சார் கட்டமைப்பு

| மாணவ ஒழுக்காற்று அதிகாரிகள் | |
|---|---|
| சட்ட நிறைவேற்று அதிகாரி | 0212218193 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நலன்புரிச்சேவைகள் கிளை | திருமதி.ஜானகி.அரவிந்தராஜ் (0772249939) |
| மாணவ ஒழுங்காற்று அதிகாரிகள் | திரு.நி.விஜேந்திரா (0773586590) |
| | திரு.பி.கஜந்தன் (0779226780) |
| பணிப்பாளர், மாணவ நலச்சேவைகள் | பேராசிரியர்.க.சசிகேஷ் (0776681425) |
| மாணவ ஆலோசகர் (சித்தமருத்துவபீடம்) | வைத்தியகலாநிதி.(திருமதி).கி.சுஜிதசாயி (0770869862)<br>வைத்தியகலாநிதி (திருமதி).மி.வித்யா (0772891404) |

## 2.4 சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம்

போசகர் - (திருமதி)வி.சத்தியசீலன் (0716222529)

பெரும்பொருளாளர் -வைத்தியகலாநிதி.(திருமதி).கி.சுஜிதசாயி (0770869862)

## 2.5 சித்த மருத்துவ பீட மாணவ விடுதி

சித்த மருத்துவ பீட விடுதி உத்தியோகத்தர்கள்

ஆண்விடுதி

முழுநேர விடுதி உபகாப்பாளர் - திரு.க.சதீஸ்குமார்
(0776925727)

பெண்விடுதி

முழுநேர விடுதி உபகாப்பாளர் - திருமதி. ஜ. காமினி
(0770881595)

# 3. சித்த வைத்தியமாணியும் சத்திர சிகிச்சைமாணியும் பட்டப்படிப்பு (BSMS)

## 3.1 சித்த வைத்தியமாணியும் சத்திர சிகிச்சைமாணியும் கற்கை நெறியின் விபரம்

### 3.1.1 கற்கை நெறியின் பெயர் - சித்த மருத்துவமாணியும் சத்திர சிகிச்சைமாணியும்

### *3.1.2 குறிக்கோள்*

சமூகத்தின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஆற்றலுடைய சித்த மருத்துவர்களை உருவாக்குதல்.

***இவ்வாறு உருவாக்கப்படும் சித்தமருத்துவப் பட்டதாரிகள்:***

- ஆரம்ப சுகாதார தேவைகளை பூர்த்தி செய்வதில் பங்களிக்கக்கூடியவர்கள்
- சுகாதார சவால்களை எதிர்கொள்ளக்கூடியவர்கள்
- மூலிகைகளை இனங்காணுவதுடன் தேவை ஏற்படின் மூலிகைத் தோட்டம் அமைப்பதில் ஆலோசனை வழங்கக்கூடியவர்கள்
- சுயமாக மருந்து தயாரிக்கக் கூடியவர்கள்
- யோகாசனம் தியானம் என்பவற்றை சுகாதார மேம்பாட்டுக்காக பயன்படுத்தும் ஆற்றலுள்ளவர்கள்
- பாரம்பரிய மருத்துவ முறைகளில் நோயைத் சிகிச்சிக்கக் கூடியவர்கள்
- நோயாளர்களுடன் ஒழுக்கத்தையும், மருத்துவ ஒழுக்க விதிமுறைகளை கடைப்பிடிக்க கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- சுதேச மருத்துவ துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல்களைப் பெறுவதோடு, புதிய

கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளக்கூடியவர்களாக உருவாக்குதல்.

### 3.1.3 சித்த மருத்துவமாணியும் சத்திர சிகிச்சைமாணியும் பட்டமாணிக் கற்கை நெறிக்கான அனுமதி

பரீட்சை திணைக்களத்தினால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பத்திர பரீட்சையின் உயிரியல் பிரிவின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

### 3.1.4 கற்கை மொழி – தமிழ்

### 3.1.5 கற்கை நெறிக்கான காலம்.

கற்கை நெறிக்கான காலம் 5 வருடங்களாகும். 3 அவத்தைகளிலும் (Phases) இறுதி வருட பரீட்சையில் சித்தியடைந்த பின் சித்த வைத்தியமாணியும் சத்திர சிகிச்சைமாணியும் பட்டம் வழங்கப்படும். அதன் பின் ஆயுர்வேத வைத்தியதிணைக்களத்தினால் வழங்கப்படும் உள்ளகப் பயிற்சியை சித்த வைத்தியசாலையில் 225 நாட்களும், 75 நாட்கள் பரம்பரை வைத்தியர்களிடமும் பெற்றுக் கொள்ள வேண்டும். இப்பயிற்சிநெறியானது முழு நேர ஒரு வருடப் பயிற்சியாக அமைகிறது. அதன்பின் ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

### 3.1.6 கற்கை நெறி முடிவடைந்த பின் வழங்கப்படும் பட்டம்.

சித்த வைத்தியமாணியும் சத்திர சிகிச்சைமாணியும் (BSMS)

### 3.1.7 கற்றல் முறை

விரிவுரைகள், சிறு குழு கலந்துரையாடல்கள், பயிற்சிகள், பயிற்சிக்கட்டுரைகள்,அறிக்கைகள்,செயற்றிட்டங்கள்,ஆய்வுகூ

டப் பரிசோதனைகள், வெளிக்களப்பயிற்சிகள், ஆராய்ச்சித் திட்டங்கள், வைத்தியசாலைப் பயிற்சிகள், மருத்துவரீதியான நோயாளி சார்ந்த விளக்கங்கள் மற்றும் சமூகம் சார்ந்த ஆராய்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை மையமாகக் கொண்ட கற்றல் சூழலை உருவாக்கவும் ஈடுபடுத்தவும் ஏற்ற பல்வேறு அறிவுறுத்தல் முறைகள் பயன்படுத்தப்படும்.

## 3.2 சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி கற்கை நெறியின் பாடவிதான அட்டவணை

### 3.2.1 பாடங்கள் நடாத்தப்படும் முறைகள் - மணித்தியாலங்களில் (Subjects in hours)

4418 மணித்தியாலங்கள் பி.எஸ்.எம்.எஸ் கற்கை நெறிக்கு (பாடத்திட்டத்திற்கு) ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 953 மணித்தியாலங்கள் கற்பிக்கும் பாடங்களுக்கும், 630 மணித்தியாலங்கள் ஆய்வுகூட பரிசோதனைகளுக்கும், 2835 மணித்தியாலங்கள் வெளிக்களம் மற்றும் வைத்தியசாலைப் பயிற்சிகளுக்கும் ஒதுக்கப்படும்.

அத்துடன் ஆய்வுத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது ∴ ஒதுக்கப்படும் இலங்கை கல்வி தகைமை மட்ட நியமம் 2015 இன் படி இணை மருத்துவ படிநிலைக்கென 600 மணித்தியாலங்கள் ஒதுக்கப்படும். இந்த அணுகுமுறை மாணவர்களுக்கு ஒரு இயக்க நிலையிலானதும் ஊடாலானதுமான அனுபவத்தின் மூலம் படிப்புத் துறையில் வெற்றிபெறத் தேவையான அத்தியாவசிய அறிவு, வினைத்திறன்கள் மற்றும் ஆற்றல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு படிநிலைக்கென ஒதுக்கப்பட்ட கருத்தியல் நேரங்களின் விநியோகம்

| கட்டம் | நேரடி கற்கை நேரங்களின் விநியோகம் | | | | பிரதான பாடங்களின் சமமான வரவுகள் | கருத்தியல் நேரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | நேரடி கற்கை நேரங்கள் | விரிவுரை | பயிற்சி | வெளிக்களம் / வைத்தியசாலைப் பயிற்சி | | |
| படிநிலை I- முன் மருத்துவம் | 863 | 398 | 465 | - | 40 | 2000 |
| படிநிலை II- இணை மருத்துவம் | 1215+600* | 375 | 165 | 675 | 44+6* | 2200+600* |
| படிநிலை III- மருத்துவம் | 2340 | 180 | - | 2160 | 60 | 3000 |
| **மொத்தம்** | **4418+600*** | 953 | 630 | **2835** | **144+6*** | **7200+600*** |

*ஆய்வுத் திட்டம்

### 3.2.2 தொழில்துறை பயிற்சி

இரண்டாம் படிநிலையில் பிரதான பாடங்களில், மாணவர்கள் நடைமுறையில் உள்ள மருந்து தயாரிப்பு முறைகள் பற்றிய ஆற்றலைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் மற்றும் வெவ்வேறு மருந்துகளைப் பற்றி நன்கு புரிந்துகொள்வார்கள். இந்த அறிவை மேம்படுத்த, மாணவர்கள் வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் உள்ள பல்வேறு மருந்துசெய் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுவார்கள். இது உள்ளூர் தொழில்களில் நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கையாளுவதை அறிந்துகொள்ள உதவி புரியும். தொழில்துறை பயிற்சி முடிந்ததும், மாணவர்கள் ஒரு தொழில்சார் பயிற்சி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

### 3.2.3 மருத்துவப் பயிற்சி

பிரதானமாக கைதடி சித்த போதனா வைத்தியசாலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள பல்வேறு கிராமிய மற்றும் மாவட்ட சித்த வைத்தியசாலைகள் மூலம் மருத்துவப் பயிற்சியைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். மேலும், வடமாகாணத்தில் பணிபுரியும் சித்தமருத்துவ பாரம்பரிய வைத்தியர்களிடம் பயிற்சிகளை அவதானித்து கற்றுக் கொள்ள மாணவர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். மேலும், மாணவர்கள் பொரளை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மற்றும் கம்பஹா விக்கிரமாராச்சி வைத்தியசாலைகளிலும் ஆயுர்வேத மருத்துவ அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். முக்கியமாகப் பரிந்துரை நோக்கங்களுக்காக மாணவர்கள் மேற்கத்தேய மருத்துவப் பயிற்சியின் அனுபவங்களை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, காசநோய் சிகிச்சை பிரிவு பண்ணை மற்றும் புற்று நோய் சிகிச்சை பரிசோதனை வைத்தியசாலை - தெல்லிப்பளை ஆகிய இடங்களில் உரிய வளவாளர்களிடம் பெற்றுக்கொள்வார்கள். இந்த வேறுபட்ட மருத்துவப் பயிற்சி அனுபவங்கள், பல்வேறு சுகாதார சேவைகளை வழங்குவதற்குரிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் பற்றிய ஆழமான புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு நோயாளிகளின் சிக்கலான மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற அறிவை வழங்குகிறது.

### 3.2.4 வெளிக்களப் பயிற்சி (களப்பயணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வெவ்வேறு புவியியல் பகுதிகளிலுள்ள தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் பரவலைக் கண்டறிவதே களப்பயணத்தின் நோக்கமாகும். தாது மற்றும் உலோகம் மற்றும் விலங்கு சார்ந்த பொருட்களையும், மூலிகை தொகுப்பு மற்றும் மூலிகை நாற்றுகளை தயாரிப்பதற்கான மருத்துவ தாவரங்களின் பாகங்களையும் செறிவாக

இருக்கும் இடங்களை அறிந்து கொள்வதுடன் அவற்றை சேகரிக்கும் திறன்களையும் மாணவர்கள் பெற்றுக்கொள்வார்கள். முதலாம் படிநிலையின் போது, படிப்பின் பிரதான பாடங்களில், சிறிய அளவில் மருத்துவ தாவரங்களை வளர்ப்பது, நாற்றங்கால் படுக்கைகள் தயாரித்தல், மூலிகை பூச்சி கட்டுப்பாடு, இயற்கையான சேதன கலவை தயாரித்தல் மற்றும் மூலிகை, விலங்கு, கனிம மற்றும் உலோக மூலப்பொருட்களை பாதுகாத்தல் ஆகியவற்றில் திறன்களை பெற மாணவர்கள் வட மாகாணத்தில் உள்ள மூலிகை தோட்டங்களுக்கு வருகை தர வேண்டும்.

இரண்டாம் படிநிலை மாணவர்கள், ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள அரசாங்க மூலிகைத் தோட்டங்கள் மற்றும் பேராதனை தேசிய அரச தாவரவியல் பூங்கா போன்ற பல்வேறு புகழ்பெற்ற மூலிகைத் தோட்டங்களுக்குச் சென்று, தங்களின் தாவரவியல் அறிவை வளப்படுத்தவும், மருத்துவத் தாவரங்களை அடையாளம் காணவும், ஆய்வு செய்யவும் மற்றும் மருத்துவ தாவரங்களை அங்கீகாரம் செய்யும் முறைகளைப் புரிந்து கொள்ளவும் உதவும். இந்த ஆழ்ந்த மற்றும் நடைமுறை அனுபவங்கள், மருத்துவ தாவரங்களின் பண்புகள் மற்றும் பயன்பாடுகள் பற்றிய ஆழமான புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதோடு, சித்த மருத்துவத்தின் எதிர்கால நடைமுறையில் இந்த மதிப்புமிக்க இயற்கை வளங்களை அடையாளம் கண்டு பயன்படுத்துவதற்குத் தேவையான திறன்களை அவர்களுக்கு அளிக்கும்.

## 3.3 பாடங்களின் வகை

கற்கை நெறியானது (பாடத்திட்டமானது) பிரதான மற்றும் இணை தொகுதி பாடங்களைக் கொண்டுள்ளது.

### 3.3.1 பிரதான பாடங்கள்

பி.எஸ்.எம்.எஸ். கற்கை நெறியானது (பட்டப்படிப்பு திட்டமானது) அடிப்படை அறிவு, திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் மனநிலையைப் பெறுவதற்கு அவசியமான அனைத்து பிரதான பாடங்களையும் மாணவர்கள் நிறைவு செய்ய வேண்டும். இந்த கற்கை நெறி (பாடத்திட்டம்) மூன்று கட்டங்களாக வழங்கப்படுகின்றன: முன் மருத்துவம். இணை மருத்துவம், மற்றும் மருத்துவம், மேலும் இவை கற்கை நெறிக்கு (பாடத்திட்டத்திற்கு) அனுமதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமானது. இந்த பிரதான பாடங்கள் மூலம், மாணவர்கள் சித்த வைத்தியம் மற்றும் சத்திர சிகிச்சையின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விரிவான புரிதலுடன், அவர்களின் எதிர்கால கல்வி மற்றும் தொழில்முறை முயற்சிகளுக்கு வலுவான அடித்தளத்தை உருவாக்க தகுதி பெறுவார்கள்.

### 3.3.2 இணை தொகுதிப்பாடங்கள்

சித்த வைத்திய, சத்திர சிகிச்சைமாணி கற்கை நெறி (பட்டப்படிப்பு) திட்டமானது, பிரதான பாடங்களுக்கு துணையாக மற்றும் வளப்படுத்த வடிவமைக்கப்பட்ட பல்வேறு இணை தொகுதிகளைக் கொண்டுள்ளது. ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவை இணை-தொகுதி பாடங்களாகும் மற்றும் இவை திசைப்படுத்தல் நிகழ்வின் போது கற்பிக்கப்படும். இவ் திசைப்படுத்தல் நிகழ்வானது பன்னிரண்டு வாரங்கள் நடைபெறும். இந்த பாடங்கள் மாணவர்களுக்கு அவசியம்.பட்டம் பெறுவதற்குத் தகுதிபெற குறைந்தபட்சம் 50% தரத்துடன், மூன்றாம் படிநிலைக்கு (மருத்துவம்) நுழைவதற்கு முன், அவர்கள் இந்த இணைத் தொகுதிகளை வெற்றிகரமாக நிறைவு செய்ய வேண்டும்.

ஒருவர் இணைத்தொகுதிப் பாடங்களில் சித்தியடையத் தவறினால் மீள்பரீட்சையானது அடுத்துவரும் கல்வியாண்டு

மாணவர்களுக்கு நடாத்தும் பரீட்சையின் போது மீள்பரீட்சைக்கு அமரவேண்டும்.

# 4. சித்த மருத்துவ மாணவர்களுக்கான அடிப்படை விதிகள்

## 4.1 பொது

பல்கலைகழகத்திற்கு அனுமதிக்கப்படும் போது மாணவர்கள் அனுமதிக் கிளையிலிருந்து தங்கள் அடையாள அட்டையினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை மாணவர்கள் எப்பொழுதும் தங்களிடம் வைத்திருத்தல் வேண்டும்.

விலாசம் பற்றிய எந்தவொரு மாற்றத்தினையும் உடனடியாக அலகுத் தலைவரினதும் அனுமதிக் கிளையினதும் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

மாணவர்கள் தங்களது நடையுடை பாவனையில் கவனம் செலுத்த வேண்டும்.

## 4.2 சித்தமருத்துவத்திற்கான ஆடையிலக்கணம்

மாணவர்களின் தோற்ற அமைப்பிற்கேற்ப நேர்த்தியானதும் பொருத்தமானதுமான ஆடைகளை அணிதல் வேண்டும்.

### 4.2.1 சித்தமருத்துவ பீடத்தினுள்

வார நாட்களிலும் (மு.ப. 8.30 - பி.ப. 4.30) மணி வரையும், கல்வி நடவடிக்கை இடம்பெறும் ஏனைய நாட்களிலும் ஆடையிலக்கணத்தை பின்பற்ற வேண்டும்.

ஆண் மாணவர்களாயின் இளநிறங் கொண்ட மேற்சட்டை, காற்சட்டை, காலுறை மற்றும் பாதணிகளை நேர்த்தியாக அணிதல் வேண்டும். தலைமுடி நேர்த்தியாக சீவப்பட்டும், முகச்சவரம் செய்யப்பட்டும் இருக்க வேண்டும். டீசேட்ஸ்,

ஜீன்ஸ், செருப்பு மற்றும் விளையாட்டு சப்பாத்து அணிதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

பெண் மாணவர்களாயின் எளிய பாவாடை, இறுக்கமில்லாத அரைச்சட்டை, சட்டை, சுடிதார், புடைவை, ஹபாயா மற்றும் மரியாதையான காலணிகள் அணிய வேண்டும். கூந்தல் நேர்த்தியாக வாரப்பட்டு கட்டப்பட வேண்டும். டீசேட்ஸ், ஜீன்ஸ், குட்டைப்பாவாடைகள், பிரிக்கப்பட்ட பாவாடைகள், இறப்பர் செருப்புக்கள் அணிவதை தவிர்க்க வேண்டும்.

### 4.2.2 சமூகம் மற்றும் பிற நிறுவனங்களில்

களப் பயிற்சி கற்றல் நடவடிக்கைகளுக்காக பிற இடங்களுக்குச் செல்லும் போது அலகினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மேற்கூறப்பட்ட ஆடை முறைகளையே பின்பற்ற வேண்டும்.

### 4.2.3 போதனா வைத்தியசாலை மற்றும் ஆய்வுகூடங்களில்

மேற்கூறப்பட்ட ஆடைகளுடன் வெள்ளைநிற மேலாடையுடன் பெயரிடப்பட்ட சீட்டு (Name tag) அணிதல் வேண்டும். மருத்துவமனை பயிற்சியின் போது புடைவை அல்லது ஹபாயா அணிதல் வேண்டும்.

### 4.2.4 வெளிக்களச் செயற்பாடுகளில்

மேற்கூறப்பட்ட ஆடைகளுடன் வெளிக்களச்செயற்பாடு மேலங்கி (Field coat) அணிதல் வேண்டும்.

### 4.2.5 யோகாசனப்பயிற்சி வகுப்புகளில்

ஆண் மாணவர்கள், பெண் மாணவர்கள் வெள்ளை நிற ரீ சேர்ட்டுடன் கறுப்பு நிற track suit டுடன் சமூகமளித்தல் வேண்டும்.

### 4.2.5 படிநிலைகளில்

**எழுத்துப் பரீட்சை** – ஆண் மாணவர்கள் வெள்ளை நிற மேலாடையுடனும் (சேர்ட்) கறுப்பு நிற காற்சட்டையுடனும் (ஜீன்ஸ்), பெண் மாணவர்கள் வெள்ளை நிற புடைவையுடன் மதவிழுமியங்களை மாறாத வகையில் சமூகமளித்தல் வேண்டும்.

**செய்முறைப் பரீட்சை** – ஆண் மாணவர்கள் வெள்ளை நிற மேலாடையுடனும் (சேர்ட்) கறுப்பு நிற காற்சட்டையுடனும் (ஜீன்ஸ்), பெண் மாணவர்கள் வெள்ளை நிற புடைவையுடன் மதவிழுமியங்களை மாறாத வகையில் சமூகமளித்தல் வேண்டும். பெயர் சீட்டு இல்லாமல் வெந்நிற மேலங்கியுடன் (கோர்ட்) சமூகமளித்தல் வேண்டும்.

**வாய்மொழி மூலமான பரீட்சை** - ஆண் மாணவர்கள் வெள்ளை நிற மேலாடையுடனும் (சேர்ட்) கறுப்பு நிற காற்சட்டையுடனும் (ஜீன்ஸ்) பெண் மாணவர்கள் வெள்ளை நிற புடைவையுடன் மதவிழுமியங்களை மாறாத வகையில் சமூகமளித்தல் வேண்டும் அத்துடன் அனைத்து மாணவர்களும் மேலங்கியுடனும் (கோர்ட்) சமூகமளித்தல் வேண்டும்

**மருத்துவ பரீட்சை** – ஆண் மாணவர்கள் வெள்ளை நிற மேலாடையுடனும் (சேர்ட்) கறுப்பு நிற காற்சட்டையுடனும் (ஜீன்ஸ்) நேர்த்தியான உடையுடனும் கழுத்துப் பட்டி அணிந்து பெயர் சீட்டு இல்லாமல், சமூகமளித்தல் வேண்டும். பெண் மாணவர்கள் புடைவையுடன் சமூகமளித்தல் வேண்டும். அத்துடன் அனைத்து மாணவர்களும் மேலங்கியுடனும் (கோர்ட்) சமூகமளித்தல் வேண்டும்.

**யோகாசன செய்முறைப் பரீட்சையின் போது**
ஆண் மாணவர்கள், பெண் மாணவர்கள் வெள்ளை நிற ரீ சேர்ட்டுடன் கறுப்பு நிற track suit டுடன் சமூகமளித்தல் வேண்டும்.

**இடைநிலைத் தேர்வுப் பரீட்சை** - இடைநிலைத் தேர்வின் போதும் படிநிலைகளில் கடைப்பிடிக்க வேண்டிய ஆடை இலக்கணங்களுடன் சமூகமளிக்க வேண்டும்.

## 5. சித்த மருத்துவ பரீட்சை விதிமுறைகளும் மதிப்பீட்டு முறைகளும்

சித்த மருத்துவ கற்கை நெறியானது பின்வரும் முறைகள் மூலம் மதிப்பிடப்படும்.

### 5.1 ஒரு பாடத்தின் மதிப்பீடு

சித்த மருத்துவ கற்கை நெறியானது ஒவ்வொரு முக்கிய மற்றும் இணைந்த பாடங்களையும் மதிப்பீடு செய்கின்றது. மதிப்பீட்டு செயல்முறை இடைநிலைத்புடிநிலை மதிப்பீடு மற்றும் இறுதிநிலைத் புடிநிலைகளை உள்ளடக்கியது. முக்கிய பாடங்களின் இறுதிநிலைத் புடிநிலைகள் மூன்று படிநிலைகளாக நடாத்தப்படும்.

படிநிலை 1 BSMS பரீட்சைகள்
படிநிலை 2 BSMS பரீட்சைகள் மற்றும்
படிநிலை 3 BSMS பரீட்சைகள்

### 5.2 இடைநிலை மதிப்பீடு

இடைநிலை மதிப்பீடானது ஒரு பாடத்தில் மாணவர்களின் முன்னேற்றத்தை தொடர்சியானதும் மற்றும் நன்கு கட்டமைக்கப்பட்டதுமான செயன்முறையை மதிப்பீடு செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தவணை முடிவிலும் இடைநிலைப்படிநிலை மதிப்பீடு ஒவ்வொன்றும் நடாத்தப்படும். ஒவ்வொரு இடைநிலைப்படிநிலை மதிப்பீட்டிற்கும் 100 புள்ளிகள் (மதிப்பெண்கள்) ஒதுக்கப்படுவதுடன் மற்றும் இடைநிலைப்படிநிலின் 30 புள்ளிகள் (மதிப்பெண்கள்) இறுதிநிலைப்படிநிலையில் சேர்க்கப்படும். ஒவ்வொரு இடைநிலைப்படிநிலை மதிப்பீட்டிற்குமான வெவ்வேறு மதிப்பீட்டு முறைகள் விரிவான பாடவிதானத்தில் ஒவ்வொரு பாடத்தின் மதிப்பீட்டு முறையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அல்லது வேறு ஏதேனும் சரியான காரணத்தால் மாணவர்களால் இடைநிலைத்புடிநிலை மதிப்பீட்டை பூர்த்தி செய்ய முடியவில்லையெனின் அவர்கள் மாதிரி மதிப்பீட்டை

கோரலாம். இதற்கான கோரிக்கையானது மதிப்பீடு நடந்து ஐந்து நாட்களுக்குள் (எழுத்து பூர்வமாக) கடிதம் மூலம் அலகுத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### 5.3. **இறுதிப் பாடத் தேர்வில் அமர்வதற்கான தகுதித் தேவைகள்**

5.3..1. வரவு

மாணவர்கள் கோட்பாடு, பயிற்சிகள, நடைமுறை பயிற்சிகள், மற்றும் வைத்தியசாலை பயிற்சிகள் ஆகிய பிரிவுகளில் குறைந்த பட்சம் 80% திருப்திகரமான வரவு பெற வேண்டும். மாணவர்கள் 80% வரவு அடையவில்லை எனில் அப் பாடத்தின் பரீட்சையிற்கு தோற்ற முடியாது.

| SN | Name of the Subjects | | Credits | Hours | Notional Hours |
|---|---|---|---|---|---|
| 1. | ஆங்கில மொழி | English Language | 8 | 120 | 400 |
| 2. | தகவல் தொழில்நுட்பம் | Information Technology | 2 | 45 | 100 |
| | **Total** | | **10** | **165** | **500** |

**Title : BSMS Co-Modules Programme**

**Duration : 12 Weeks**

# Curriculum Overview 2023

<table>
<tr><td colspan="4">Year 1</td><td colspan="4">Year 2</td><td colspan="3">Year 3</td><td colspan="4">Year 4</td><td colspan="4">Year 5</td></tr>
<tr><td>Induction programme</td><td>T1</td><td>T2</td><td>T3</td><td>T4</td><td>Ex</td><td>T5</td><td>T6</td><td>T7</td><td>T8</td><td>T9</td><td>Ex</td><td>T10</td><td>T11</td><td>T12</td><td>T13</td><td>T14</td><td>T15</td><td>Ex</td></tr>
<tr><td rowspan="3">1. Orientation Programme<br>2. ஆங்கில மொழி<br>3. தகவல் தொழில்நுட்பம்</td><td colspan="4">Phase I of BSMS Degree</td><td rowspan="3">Phase I Examination</td><td colspan="5">Phase II of BSMS Degree</td><td rowspan="3">Phase II Examination</td><td colspan="6">Phase III of BSMS Degree</td><td rowspan="3">Phase III Examination</td></tr>
<tr><td colspan="4">1. தாதுஜீவவியல்<br>2. பதார்த்த குண விஞ்ஞானம்<br>3. சித்தமருத்துவ மூலதத்துவமும் உடற்கூற்றியலும்<br>4. சித்தமருத்துவ வரலாறும் உயர் தமிழும்<br>5. சித்த உடல் தத்துவமும் உடற்தொழிலியலும்<br>6. உயிர்இரசாயனம்</td><td colspan="5">1. மருந்து செய்முறையியல்<br>2. மூலிகையியல்<br>3. சமூகநலமருத்துவம்<br>4. பாரம்பரிய உணவும் ஆரோக்கியமும்<br>5. நஞ்சியலும் நீதி மருத்துவமும்<br>6. மேற்கத்தேய பிணியியல்<br>7. சிகிச்சை அடிப்படைத்தத்துவங்கள்<br>8. நோய்நாடல்<br>9. ஆய்வு அறிக்கை</td><td colspan="6">1. சிரோரோக மருத்துவம்<br>2. அறுவை மருத்துவம்<br>3. மகளிர் மருத்துவமும் மகப்பேற்றியலும்<br>4. குழந்தை மருத்துவம்<br>5. பரம்பரை மருத்துவம்<br>6. மருத்துவம்</td></tr>
<tr><td colspan="4">Pre Clinical Subjects</td><td colspan="5">Para Clinical Subjects</td><td colspan="6">Clinical Subjects</td></tr>
</table>

**T - Term**

# Curriculum Overview 2023 in English

| Year 1 | | Year 2 | | Year 3 | Year 4 | | Year 5 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Induction programme | T1, T2, T3 | T4 | Ex | T5, T6 / T7, T8, T9 | Ex | T10, T11, T12 | T13, T14, T15 | Ex |
| 1. Orientation Programme<br>2. English Language<br>3. Information Technology | **Phase I of BSMS Degree**<br>1. Mineral, Metal & Animal Materialized Medicines<br>2. Materia Medica<br>3. Basic Principles of Siddha Medicine & Anatomy<br>4. History of Siddha Medicine & Advanced Tamil<br>5. Siddha *Udalthathuvam* and Physiology<br>6. Biochemistry | | **Phase I Examination** | **Phase II of BSMS Degree**<br>1. Pharmacy<br>2. Pharmacology<br>3. Community Medicine<br>4. Traditional Food and Wellness<br>5. Toxicology & Forensic Medicine<br>6. Western Pathology<br>7. Fundamentals of Therapeutics<br>8. Siddha Pathology<br>9. Research Project | **Phase II Examination** | **Phase III of BSMS Degree**<br>1. Ear, Nose, Throat Medicine, Ophthalmology & Dentistry<br>2. Surgery<br>3. Gynaecology and Obstetrics<br>4. Paediatrics<br>5. Traditional Medicine<br>6. Medicine | | **Phase III Examination** |
| | **Pre Clinical Subjects** | | | **Para Clinical Subjects** | | **Clinical Subjects** | | |

**T - Term**

## 5.4 பரீட்சைகளின் பெயர்கள்

சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமாணி பட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்படும் இறுதிப் பருவ பரிட்சைகள் குறிப்பிட்ட பரீட்சையின் படிநிலைக்கான (அட்டவணை III) பின்வரும் பரீட்சை பெயர்களை உள்ளடக்கியுள்ளன.

அட்டவணை (III): பரீட்சைகளின் பெயர்கள்

| பரீட்சையின் பெயர் | முறையான பரீட்சை | மீள் பரீட்சை |
|---|---|---|
| சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமாணி பட்டப்படிப்பிற்கான பரீட்சையின் படிநிலை I | நான்காம் தவணையின் இறுதியில் நடைபெறும் சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமானி பட்டப்படிப்பிற்கான படிநிலை I | பரீட்சை சபையினால் பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மீள் பரீட்சைக்கான திகதி மாணவர்களுக்கு அறிவிக்கப்படும். |
| சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமாணி பட்டப்படிப்பிற்கான பரீட்சையின் படிநிலை II | ஒன்பதாம் தவணையின் இறுதியில் நடைபெறும் சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமானி பட்டப்படிப்பிற்கான படிநிலை II | |
| சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமாணி பட்டப்படிப்பிற்கான பரீட்சையின் படிநிலை III | பதினைந்தாம் தவணையின் இறுதியில் நடைபெறும் சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையில் இளமானி பட்டப்படிப்பிற்கான படிநிலை III | |

## ***5.5 தரங்களை குறிக்கும் அளவுத்திட்டம்***

அட்டவணை IV: தரங்களை குறிக்கும் அளவுத்திட்டம்

| புள்ளிகளின் வீச்சு | பிரதான மற்றும் துணை கற்கைநெறி அலகுகள் |
|---|---|
| 75% அல்லது அதற்கு மேலும் | அதிசிறப்புச் சித்தி |
| 70% - 74% | A |
| 60% - 69% | B |
| 50% - 59% | C |
| 50% ற்கு கீழ் | F |

சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பட்டப்படிப்பில் கற்கைநெறி அலகுகளில் சித்தி பெற மாணவர் ஒருவர் அனைத்து பிரதான மற்றும் துணை கற்கை நெறி அலகுகளில் ஆக குறைந்தது “C” தரத்தினை பெற்றிருக்க வேண்டும்.

### 5.6 தடை தாண்டற் பரீட்சை

5.6.1. படிநிலை I இல் தடை தாண்டல் நிலை I (முன்மருத்துவம்)

பரீட்ச்சார்த்தி ஒருவர் சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பட்டப் படிப்பிற்கான பரீட்சையின் படிநிலை I ன் முன் மருத்துவ கற்கை நெறிகளின் அனைத்து பிரதான கற்கை நெறி அலகுகளிலும் சித்தி அடைந்த பின்னரே படிநிலை II / சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பட்டப்படிப்பிற்கான இணை மருத்துவ கற்கை நெறிகளை தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

5.6.2 படிநிலை II இல் தடை தாண்டல் நிலை II (இணை மருத்துவம்)

பரீட்ச்சார்த்தி ஒருவர் சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பட்டப் படிப்பிற்கான பரீட்சையின் படிநிலை II/ இணை மருத்துவ கற்கை நெறிகளின் அனைத்து பிரதான கற்கை நெறி அலகுகளிலும் சித்தி அடைந்த பின்னரே படிநிலை III/ சித்த மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை பட்டப்படிப்பிற்கான மருத்துவ கற்கை நெறிகளை தொடர்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

படிநிலை I மற்றும் II இற்கான கற்கை நெறி அலகுகளுக்கான வாய்மொழிப் பரீட்சை இரண்டு தேர்வாளர்களைக் கொண்ட குழுவினாலும் படிநிலை III ற்கான வாய்மொழிப் பரீட்சை இதற்கு மேலதிகமான ஒரு புறத் தேர்வாளரையும் கொண்ட குழுவினாலும் நடாத்தப்படும்.

### *5.7 இறுதிப் பருவப் பரீட்சைக்கு மீண்டும் தோற்றுதல்*

மாணவர் ஒருவர் BSMS இறுதிப் பருவப் பரீட்சையில் (முதலாம் தடவை) சித்தியடைய தவறினால் குறித்த BSMS இறுதிப்பருவ பரீட்சையின் (முதலாம் தடவை) முடிவுகள் வெளியாகி ஆறு வாரங்களின் பின்னர் மீள் பரீட்சைஒன்று (இரண்டாவது தடவை) நடைபெறும்.

பரீட்சை பெறுபேறு வெளியான பின் மீள் பரீட்சைக்கான (இரண்டாவது தடவை) விபர அட்டவணை மாணவர்களுக்கு அறிவிக்கப்படும் என்பதுடன் பரீட்சை பெறுபேறு வெளியான திகதியில் இருந்து ஆறாவது வார இறுதியில் இது நடைபெறும்.

மருத்துவ காரணங்கள் அல்லது சரியான காரணத்தால் (இறப்பு போன்றவற்றால்) பரீட்சைக்கு தோற்றாத மாணவர்கள் அலகின் தலைவரிடம் மருத்துவ சான்றிதழ் அல்லது துணை ஆவணங்களுடன் (சரியான காரணத்துடன்) மேன்முறையீட்டை சமர்ப்பிக்க வேண்டும். பரீட்சை முடிந்து 7 நாட்களுக்குள் மேன்முறையீடு சமர்ப்பிக்க வேண்டும். மருத்துவ சான்றிதழ் பல்கலைக்கழக மருத்துவரினால் பரிந்துரைக்கப்பட்ட அலகுத் தலைவரினால் அனுப்பப்படும். இதற்கு மூதவையின் அனுமதி பெறப்படும். இது அடுத்த இறுதி பருவ பரீட்சைக்கு தோற்றுவதற்கான முதலாவது முயற்சியாக கொள்ளப்படும். இதற்கு கல்வி சார் அபராதம் எதுவுமில்லை. மாணவர் ஒருவர் இரண்டாம் முயற்சியாக மீள் பரீட்சைக்கு தோற்றும் போது கற்கை நெறிக்காலத்தின் மதிப்பீட்டுப் புள்ளிகள் (In-course assignment marks) இதில் செல்வாக்கு செலுத்தாது. எவ்வாறாயினும் குறித்த மாணவர் “B” தரத்தை பெற முடியும் என்பதுடன் மாணவர் வகுப்பொன்றை பெறுவதற்கான தகுதியையும் இழக்க நேரிடும்.

| வகுப்பின் வகைப்பாடு | மொத்த புள்ளியின் சராசரி | குறைந்த பட்சம் தேவையான தரம் |
|---|---|---|
| 1ம் வகுப்பு | 69.5 % அல்லது அதற்கு மேல் | 15 D மற்றும் 6 A |
| இரண்டாம் வகுப்பு மேல் பிரிவு | 64.5 % அல்லது அதற்கு மேல் | 15 A மற்றும் 6 B |
| இரண்டாம் வகுப்பு கீழ் பிரிவு | 59.5 % அல்லது அதற்கு மேல் | 15 B மற்றும் 6 C |
| தேர்ச்சி | 50% அல்லது அதற்கு மேல் | 21 C |

# 6. நூலகம்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்

### அறிமுகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974ஆம் ஆண்டு நிறுவப்பட்டபோதே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகமும் உருவாக்கப்பட்டது. இந்நூலகமானது பல்கலைக்கழகத்தின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான தகவல்களை வழங்கி துணை நிற்கின்றது. மேலும் திருநெல்வேலியில் அமைந்துள்ள பிரதான நூலகத்திற்கு மேலதிகமாக கிளை நூலகங்களான மருத்துவ பீட நூலகம், சித்தமருத்துவ பீட நூலகம் (கைதடி), இராமநாதன் நுண்கலைக்கலைகள் பீடம் (மருதானமடம்), முகாமைத்துவ பீட நூலகம், கிளிநொச்சி வளாகத்தின் விவசாய பீட நூலகம், பொறியியல் பீட நூலகம், தொழில்நுட்பவியல் நூலகம் என்பவற்றினூடாக தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

### நூலக அங்கத்துவம் (Library Membership)

நூலகத்தில் அங்கத்தவராக இணைவதற்கு, நூலக வாசகர் சேவைப்பிரிவில் நூலக அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தினை பெற்று அதனை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் தகைமை கற்கைநெறிகளினை மேற்கொள்ளுவதற்காக பதிவு செய்த மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வகையான ஊழியர்களும் நூலக அங்கத்தவர்களாக தம்மை பதிவு செய்து கொள்ள முடியும்.

மேற்குறித்த அங்கத்துவ வகைகளுக்குள் அடங்காத பிற பல்கலைக்கழக ஊழியர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொது மக்கள் போன்றோர் நூலகரின் அனுமதியுடன் நூலகத்தினை தற்காலிகமாக பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

### நூலகம் திறக்கும் நேரம் (Library Opening Hours )

சித்த மருத்துவபீட நூலகமானது வார நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4மணி வரை வாசகர் பயன்பாட்டிற்காக திறக்கப்படுகிறது. நூலகம் வார இறுதி நாட்களிலும் மற்றும் பொதுவிடுமுறை தினங்களிலும் திறக்கப்படுவதில்லை. எனினும் நூலகம் திறந்திருக்கும் நேரத்தினை நீட்டிப்பது தொடர்பில் தேவைக்கேற்ப தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

### நூலக தகவல் வளங்களும் அதன் ஒழுங்கமைப்பும் (Library collection and its organization)

தற்போது நூலக சேகரிப்பில் அனைத்துப் பாடவிதானங்களையும் உள்ளடக்கியதான நூல்கள் (275,472), கல்விசார் மற்றும் பொதுப் பருவ இதழ்கள் (1,953 தலைப்புக்கள்) மற்றும் தினசரி செய்தித்தாள்கள் (70 தலைப்புக்கள்) போன்றன காணப்படுகின்றன. இவைதவிர, சிறுநூல்கள் (Pamphlets), இலத்திரனியல் வளங்கள் (E – Resource), கட்புல மற்றும் செவிப்புல சாதனங்கள் (Audio visual materials), ஓலைச்சுவடிகள் (Palm leaves), கையெழுத்துப் பிரதிகள் (Hand-written manuscripts), மற்றும் நுண்வடிவங்கள் (Microforms) போன்றனவும் இந்நூலக சேகரிப்பில் அடங்குகின்றன. இத்தகவல் வளங்கள் பற்றிய சிறுகுறிப்பு பின்வருமாறு:

**நூல்கள் (Books)**: பாடநூல்கள், தனிநூல்கள் (Monographs), இணைபாடவிதான வாசிப்பு நூல்கள், பொழுதுபோக்கு வாசிப்பு நூல்கள், என்பன இந்த வகைக்குள் அடங்குகின்றன. தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட இந்நூல்கள் பல்வேறு விடயங்கள் சார்ந்தவையாக காணப்படுகின்றன.

**தொடர் வெளியீடுகள் (Serials)**: கல்விசார் ஆய்விதழ்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், செய்திமடல்கள் போன்றன இவற்றுள் அடங்கும். இவைதவிர, கிளை நூலகங்கள் தமது பீடங்களில் கற்பிக்கப்படும் கற்கைநெறிகள் தொடர்பில் விடய ரீதியான தொடர் வெளியீடுகளின் சேகரிப்புக்களையும் கொண்டிருக்கும்.

**சிறுநூல்கள் (Pamphlets)**: பல்வேறு விடயம் சார்ந்து எழுதப்பட்ட 48 பக்கங்களுக்கு குறைவான பக்கங்களையுடைய நூல்கள் சிறு நூல்கள் என அழைக்கப்படும். தற்போது சுமார் 14,249 சிறுநூல்கள் நூலக சேகரிப்பில் காணப்படுகின்றன.

**ஆய்வறிக்கை மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் (Theses and Dissertations)**: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் பிற பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முதுமாணி, மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு ஆய்வறிக்கை மற்றும் ஆய்வுக்கட்டுரைகள் நூலக ஆவணக் காப்பகப் பிரிவில் பேணப்படுகின்றன.

**அரச வெளியீடுகள் (Government Documents)** : இலங்கை அரசாங்கத்தின் அமைச்சுகள், துறைகள், கூட்டுநிறுவனங்களின் வெளியீடுகள் மற்றும் தேசிய வெளியீடுகள் என்பன அரச ஆவணகாப்பப் பிரிவில் பராமரித்து பேணப்படுகின்றன. மேலும் திறைச்சேரியினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், பாராளுமன்ற வெளியீடுகள் (மசோதாக்கள், வெள்ளை அறிக்கைகள், ஹான்சாட்) மற்றும் வர்த்தமானி ஆகியன நிரந்தர உசாத்துணை ஆவணங்களாக இங்கு காணப்படுகின்றன.

**விசேட மற்றும் அரிய நூல்களின் சேகரிப்பு (Special and Rare collections):** இந்தியப் பாரம்பரியம், கல்வெட்டியல், சமயம், பாரம்பரிய மருத்துவம், தொல்லியல், வரலாறு போன்ற பல்வேறு விடயங்கள் சார்ந்த அரிய நூல்கள் ஆவணக் காப்பகத்தில் பேணப்படுகின்றன. அத்தோடு இலங்கையில் வெளியிடப்படும் மற்றும் இலங்கை பற்றிய வெளியீடுகளும் ஓலைச்சுவடிகளும் இங்கு பராமரிக்கப்படுகின்றன.

**இலத்திரனியல் வளங்கள் (Electronic resources):** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சந்தாப்பணம் செலுத்தப்பட்ட தரத்தளங்கள்(Database), இறுவெட்டு(CD), செவிப்புல மற்றும் கட்புல சாதனங்கள் (Audio-Visual) போன்றன இவற்றுள் அடங்கும். பிரதான நூலகத்தின் இலத்திரனியல் வள பிரிவில் இத்தகவல் சேவையினை பெற்றுக் கொள்ள முடியம்.

இதுதவிர, ஆராய்ச்சி சேமவைப்பிடம் (Research Repository) மூலம் பல்கலைக்கழகத்தின் ஆய்வு தொடர்பான வெளியீடுகளையும் எண்ணிம நூலகத்தின் (Digital Library) மூலம் கடந்தகால பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் இலத்திரனியல் நூல்களையும் அணுக முடியும்.

### நூலக இரவல் வழங்கல் சேவை (Circulation Service)

பல்கலைக்கழக நூலக சேகரிப்பில் காணப்படும் நூல்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. இரவல் வழங்கும் நூல்கள் (Labeled as “S”- Stacks books)
2. உசாத்துணை நூல்கள் (Labeled as “R” - Reference books)
3. நிரந்தர உசாத்துணை நூல்கள் (Labeled as “PR” – Permanent Reference books)

இவற்றில் Stacks books (2Weeks) மற்றும் Reference books (Overnight) என்பவை மட்டுமே வாசகர்களால் இரவல் பெற்றுக் கொள்ள முடியும். நிரந்தர உசாத்துணை நூல்கள், அரச ஆவணக் காப்பகத்திலுள்ள நூல்கள், ஆவண காப்பகத்திலுள்ள நூல்கள், பருவ வெளியீடுகள், உடனடி உசாத்துணை நூல்கள் போன்றன இரவல் வழங்கலுக்கு அனுமதிக்கப்படுவதில்லை.

**இரவல் வழங்கும் சேவை நேரம்**

| | | |
|---|---|---|
| **Weekdays (Monday to Friday)** | **Stacks** | 8.30 a.m. – 4.00 p.m. |
| | **Reference (Issue)** | 3.00 p.m. – 4.00 p.m. |
| | **Reference (Return)** | 9.00 a.m. – 10.00 a.m. |

**இளநிலை மாணவர்களுக்கான இரவல் வழங்கும் முறை**

**(Loan limits for Undergraduates)**

| Year of Study | Stacks | Reference |
|---|---|---|
| First year | 02 | 01 |
| Second year | 03 | 01 |
| Third year | 04 | 01 |
| Final year | 04 | 01 |

**பட்டப்பின் தகைமை கற்கைநெறி மாணவர்களுக்கான இரவல் வழங்கும் முறை**

**(Loan limits for Postgraduate Students)**

| Year of Study | Stacks | Reference |
|---|---|---|
| Post Graduate Diploma | 02 | 00 |
| Masters & Doctoral | 02 | 00 |
| Other Diploma | 02 | 00 |

**பல்கலைக்கழக ஊழியர்களுக்கான இரவல் வழங்கும் முறை (Loan Limits for Staff)**

| Staff Type | No of books |
|---|---|
| Academic (Permanent) | 08 books either category at a time (one month) |
| Administrative (Permanent) | 08 books either category at a time (one month) |
| Academic (Temporary) | 04 books either category at a time (one month) |
| Non Academic (Permanent) | 04 books either category at a time (one month) |

**இரவல் வழங்கலுக்கான நீட்டிப்பு (Extension of Period)**

இளநிலை மாணவர்களுக்கான Stacks books 14 நாட்களுக்கு இரவல் வழங்கப்படுகின்றது. தேவைப்படின் குறித்த நூலுக்கான இரவல் வழங்கல் காலம் மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்படலாம். எனினும் குறித்த நூலானது வேறு ஒரு வாசகரினால் முன்பதிவு செய்யப்பட்டிருப்பின் இக்கால நீடிப்பு வழங்கப்படமாட்டாது.

**நூலுக்கான முன்பதிவு (Reservation of library materials)**

வாசகர் ஒருவருக்கு தேவைப்படும் நூலொன்று ஏற்கனவே இரவல் வழங்கப்பட்டிருந்தால் அல்லது நூலகத்திற்கு புதிதாக வரும் நூல்களை காட்சிப்படுத்தும் இறாக்கையில் அந்நூல் காணப்பட்டால் அந்நூலிற்கான முன்பதிவினை மேற்கொள்வதன் மூலம் வாசகர் குறித்த நூலினை இரவல் பெற்றுக் கொள்ள முடியும்.

இரவல் வழங்கப்பட்ட நூலானது நூலகத்தில் மீள ஒப்படைக்கப்பட்ட பின்னர் அல்லது காட்சிப்படுத்தப்பட்ட நூல்கள் இறாக்கைப்படுத்தலுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னர், ஏற்கனவே முன்பதிவு செய்த வாசகருக்கு அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

### கட்டணம் மற்றும் தண்டப்பணம் (Payment and Fines)

குறித்த நூலானது எந்த வாசகரின் பெயரில் இரவல் வழங்கப்பட்டதோ அவரே அதற்கு பொறுப்புக் கூற வேண்டும். குறித்த நூலிற்கான இரவல் காலம் முடிவடைந்த பின்னரும் நூலானது நூலகத்தில் மீள ஒப்படைக்கப்படாதவிடத்து அபாராதம் விதிக்கப்படும். அபராதம் செலுத்தத் தவறினால் நூலகச் சேவைகளினை பெற்றுக் கொள்ளும் உரிமை இடை நிறுத்தப்படும்.

வாசகர் ஒருவர் இரவல் வழங்கப்பட்ட நூலினை தொலைத்துவிட்டாலோ அல்லது சேதப்படுத்திவிட்டாலோ குறித்த பதிப்பு அல்லது அதற்கு பின்னைய பதிப்பினை நூலகத்திற்கு வழங்க வேண்டும். நூலினை மீள் அளிக்க முடியாத சந்தர்ப்பத்தில் அதற்கான தண்டப்பணம் நூலகத்தினால் அறவிடப்படும்.

### நூலக அங்கத்துவத்தினை இரத்து செய்தல் (Cancellation of Library Membership)

கற்கைநெறி காலம் பூர்த்தி செய்யப்பட்டவுடன் நூலக அங்கத்துவமும் இரத்துச் செய்யப்படும். குறித்தவாசகர் மீது பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பங்களிலும் நூலகத்தில் அவர் தவறான நடத்தைபாங்கில் ஈடுபடும் சந்தர்ப்பங்களிலும் நூலக உறுப்புரிமை இரத்து செய்யப்படும் அல்லது அவருக்கான நூலக சேவைகள் மட்டுப்படுத்தப்படும்.

### நூலக விதிமுறைகள் (Library Rules)

1. காதித் தாள்கள் தவிர்ந்த எந்தவொரு பொருட்களையும் நூலகத்திற்குள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

2. நூலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் அமைதி பேணப்பட வேண்டும்.

3. நூலக வளாகத்தில் குழுவாக கலந்துரையாடல் செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு வாசகர்களுக்கு அனுமதிக்கப்படமாட்டாது.

4. நூலகத்திற்குள் புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் மற்றும் உணவு உட்கொள்ளுதல் கொண்டு வருதல் போன்றன அனுமதிக்கப்படமாட்டாது.

5. நூலினை இரவல் பெற்றுக் கொள்ள வரும் போது, வாசகர்கள் தமது பல்கலைக்கழக அடையாள அட்டையினை சமர்ப்பித்தல் அவசியமானது.

6. நூலகப் பொருட்களையோ அல்லது ஆவணங்களையோ சேதப்படுத்தல் அல்லது அனுமதி இல்லாமல் வெளியே எடுத்துச் செல்லுதல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன் அத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் வாசகர் நூலக இரவல் வழங்கல் சேவையினை பெறுவதிலிருந்து இடை நிறுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைக்காக பல்கலைக்கழக துணைவேந்தரிடம் பரிந்துரை செய்யப்படுவர்.

7. புத்தக இறாக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நூல்களினை வாசித்து முடித்த பின்னர் மீள இறாக்கைப்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

8. நூலக ஒழுக்க முறைகளுக்கு பொருத்தமற்ற நடவடிக்கைகள் வாசகர் ஒருவரிடம் அவதானிக்கப்படின் அவர் நூலகத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவர்.

9. நூலை இரவல் பெற்றுச் செல்ல முன்னர் அவற்றில் ஏதேனும் சேதம் இருப்பின், வாசகர்கள் நூலக ஊழியரின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும்.

10. நூலகத்தின் இருக்கைகளை எந்தவொரு வாசகரும் முன்பதிவு செய்ய முடியாது.

## 7. கல்விச் சூழலும் மாணவர் நலச் சேவைகளும்

சகல அரச பல்கலைக்கழகங்களும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் முழுமையான ஆற்றல்களை வெளிப்படுத்துவதை ஊக்கப்படுத்துவதற்குச் சாதகமான ஒரு கல்விச் சூழலை வழங்குகின்றன. எல்லாப் பல்கலைக்கழகங்களும் ஒரு தரமான வசதிகளையும், மாணவர் சேவைகளையும், பொது வசதிகளையும் வழங்குகின்றன. பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் இடம், அதன் முதிர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்து இவற்றில் கிடைக்கும் வளங்களிலும், தரத்திலும் வேறுபாடுகள் இருக்கக்கூடும். எல்லா அரச பல்கலைக்கழகங்களும் ஆங்கில மொழித்திறன்கள், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப திறன்கள், தொழில் முயற்சித் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள், நன்னடத்தை, ஆளுமை கவர்ச்சி முதலிய துணைநிலையான பரிமாற்றக் கூடிய திறன்களை அடைவதற்கு மாணவர்களுக்கு உதவும் வகையில் துணைக்கற்றல் நிலையங்களையும், கற்கை நெறிகளையும் கொண்டுள்ளன. பெரும்பாலான தேசிய பல்கலைக்கழகங்கள் விசேட தேவைகள் அல்லது மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்காக விசேட ஆதரவு மற்றும் உதவிச் சேவைகளை விருத்தி செய்துள்ளன. அத்தகைய மாணவர்களுக்கான வசதிகளை மேலும் மேம்படுத்தும் முயற்சியில் சகல பல்கலைக்கழகங்களும் ஈடுபட்டுள்ளன.

**விடுதி வசதிகள்**: கொழும்புக்கு வெளியேயுள்ள ஏற்கனவே நிலைபெற்ற பல்கலைக் கழகங்களும் புதிதாக நிறுவப்பட்ட பல்கலைக்கழகங்களும் வதிவிட வசதிகளைக் கொண்டுள்ளன. கொழும்பை மையமாகக் கொண்ட பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழகங்களுக்கு வெளியே அதிக வதிவிட வசதிகள் இருப்பதனால், வரையறுக்கப்பட்ட வதிவிட வசதிகளைக் கொண்டுள்ளன. பல்கலைக்கழக விடுதியில் வதிவிட வசதிபெற்ற மாணவர் தாம் அங்கு தங்கும் காலத்தில் செலுத்தும் கட்டணம் மிகச் சொற்பமே, வதிவிட வசதி பெற்ற மாணவர் பல்கலைக்கழக விடுதி நிருவாகத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். விடுதிகள் சிற்றுண்டிச்சாலை வசதிகளையும் சில சமயங்களில் சமைத்து உண்ண விரும்பும் மாணவர்களுக்கான சமையல் வசதிகளையும் கொண்டுள்ளன.

**சுகாதார சேவை**: சகல அரச பல்கலைக்கழகங்களும் மாணவர்களுக்கு வழக்கமான உடல் நல சேவைகளையும் அவசர சேவைகளையும் வழங்குவதற்கான உள்ளக சுகாதார சேவை நிலையங்களைக் கொண்டுள்ளன. ஒரு மாணவருக்கு விசேட அல்லது அவசர மருத்துவ உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உள்ளக சுகாதார சேவை நிலையம் அம்மாணவரை அண்மையிலுள்ள அரச மருத்துவமனைக்கு அனுப்பும்.

**காவலும் பாதுகாப்பும்**: பல்கலைக்கழக பாதுகாப்புச் சேவை வலைப்பின்னலூடாக மாணவர்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழல் உறுதி செய்யப்படுகிறது. மேலும் மாணவர்களின் நடத்தையும் ஒழுங்கும் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் நடைமுறையிலுள்ள பல்கலைக்கழக காவலர் (மார்சல்) ஒழுக்காற்று காவலர் (புறக்றர்) முறைமையினூடாக கவனமாக கண்காணிக்கப்படுகின்றன.

**நூலக சேவை:** சகல தேசிய பல்கலைக்கழகங்களும் நிறைவான நூல் தொகுதிகளை கொண்ட மத்திய நூலகங்களையும், பல்வேறு பீடங்களுக்கும் உரிய கிளை நூலகங்களையும் கொண்டுள்ளன. இந்நூலகங்களில் அவ்வவ் துறைகளுக்குரிய மிகச் சிறப்பான நூல் சேர்க்கைகள் உள்ளன. பெரும்பாலான நூலகங்களின் சேவைகள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் உசாத்துணை நூல்களை தேடுவது இலகுவாக்கப்பட்டுள்ளது. நூலக உதவியாளர்கள் மாணவர்களுக்கு உதவ எப்போதும் தயார் நிலையில் உள்ளனர்.

**தகவல் தொடர்பாடல் சேவைகள்:** சகல அரச பல்கலைக்கழகங்களும் தகவல், தொடர்பாடல் மத்திய நிலையங்களைக் கொண்டுள்ளன. இந்த மத்திய நிலையங்களுக்கு துணையாக பெரும்பாலான பீடங்கள் தனியான கணினி அலகுகளை கொண்டுள்ளன. இந்த நிலையங்கள் சகல பீடங்கள், பிரிவுகள், மையங்கள், அலகுகள் ஆகியவற்றில் பயிலும் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இணைய சேவைகளுடன் கூடிய உள்ளக வலைய இணைப்பை வழங்குகின்றன. அத்துடன் பீடங்களால் வழங்கப்படும் கற்கை நெறிகளுக்கு துணையாக தகவல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களாகவும், தொழில்நுட்ப வள நிலையங்களாகவும் இவை

செயற்படுகின்றன. பெரும்பாலான தகவல் தொழில் நுட்ப மையங்கள் உள்வாரி, வெளிவாரி மாணவர்களுக்கு சான்றிதழ், மற்றும் டிப்ளோமா பயிற்சி நெறிகளையும் வழங்குகின்றன. மேலும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இணையம் மூலம் கற்றல் வளங்களையும் சேவைகளையும் வழங்குகின்றன.

**தொழில் வழிகாட்டல் சேவைகள்:** எல்லா அரச பல்கலைக்கழகங்களும் தொழில் வழிகாட்டல் அலகுகளைக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பகுதிநேர அல்லது முழுநேர பணிப்பாளர்களும், ஆலோசகர்களும் பணிபுரிகின்றனர். இத்தொழில் வழிகாட்டல் அலகுகள் மாணவர்கள் தங்களை தாங்களே தொழில் உலகுக்குத் தயார்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு பரந்துபட்ட கற்றல் திட்டங்களையும், வாய்ப்புக்களையும் வழங்குகின்றன. இக்கல்வித்திட்டங்கள் இளம் வயதினர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு மாறுவதை இலகுபடுத்துவதையும், கல்வி, மற்றும் தொழில்சார் ஆலோசனை சேவைகளை வழங்குவதையும், தொழில் வாய்ப்புக்கான திறன்களையும், தொழில் முயற்சிக்கான திறன்களையும் பெறுவதற்கான கற்றல் வாய்ப்புக்களை வழங்குவதையும், ஆளுமை அபிவிருத்திக்கான திட்டங்களை வழங்குவதையும் நோக்கங்களாக கொண்டவை. அத்தோடு, தொழில்சார் தகவல்களைப் பெறுதல், மாணவர்கள் தொழில் அனுபவம் பெறக்கூடிய வகையில் பட்டதாரி மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை தேடுதல், அதன் மூலம் தனியார் துறையிலும், அரச துறையிலும் தொழில் தேடும் அவர்களின் முயற்சியையும், சுயதொழில் முயற்சிகளைத் தொடங்குவதையும் இலகுவாக்குதல் என்பனவும் இதன் நோக்கங்கள் ஆகும்.

**ஆங்கில மொழி கற்பித்தல் திட்டம்:** போட்டி மிகுந்த இன்றைய உலகில் வெற்றி பெறுவதற்கு தேசிய மொழிகளில் திறன் பெறுவதோடு ஆங்கிலத்திலும் வேறு பிற மொழிகளிலும் தேவையான அளவு தேர்ச்சி பெறுதல் மிகவும் இன்றியமையாததாகும். சகல அரச பல்கலைக்கழகங்களும் ஆங்கில மொழி கற்பித்தல் துறையையும் (ELTD) ஆங்கில மொழி கற்பித்தல் கற்கை நெறிகளையும், பாடவிதானம், பௌதீக மற்றும் மனித வளங்கள், ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகளின் கொள்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் வியாபித்து வலுப்படுத்தியுள்ளன. பெரும்பாலான கற்கை நெறிகள் ஆங்கில மொழி கற்பித்தலைப் பாடவிதானத்தில் உள்ளடக்கியதோடு விதிக்கப்பட்ட பாட நெறிகளை பூரணப்படுத்துவதற்கு ஆங்கிலத்தை கட்டாய பாடமாகவும் ஆக்கியுள்ளன. பட்டம் பெறுவதற்கு முன்னர் மாணவர்கள் திருப்தியான முறையில் தங்கள் ஆங்கில தேர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டியது கட்டாயமாகும்.

**விளையாட்டு, பொழுது போக்கு வசதிகள்:** சகல தேசிய பல்கலைக்கழகங்களும் சுய நிறைவான சமூக, தொழிற்பாட்டு நிறுவனங்களாகும். தனது மாணவர்களுக்கும் பணித்தொகுதியினருக்கும் அவசியத் தேவையான அனைத்து சேவைகளையும் அவை வழங்குகின்றன. ஆரோக்கியமான மனங்களையும், சக்தி வாய்ந்த உடல்களையும் மேம்படுத்தும் நோக்குடன், சகல பல்கலைக்கழகங்களும் அனைத்துச் சாதனங்களையும் கொண்ட விளையாட்டு, பொழுதுபோக்கு வசதிகளை விருத்தி செய்து செயற்படுத்தி வருகின்றன. சில பல்கலைக்கழகங்கள் பூரண உபகரணங்களைக் கொண்ட உள்ளக விளையாட்டு உடற்பயிற்சிக் கூடங்களைக் கொண்டுள்ளன. சில பல்கலைக்கழகங்கள் விளையாட்டு துறை, விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய கற்கை துறைகளில் சான்றிதழ், டிப்ளோமா பாடநெறிகளுக்கான கற்பித்தலை ஆரம்பித்துள்ளன. விளையாட்டு, பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்கான வசதிகளை வழங்குவதோடு பல பல்கலைக்கழகங்கள் போட்டிக்குரிய அநேக விளையாட்டுக்களில் வாண்மை சார்ந்த பயிற்சிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குகின்றன. அத்தோடு தேசிய, பல்கலைக்கழகங்களுக்கிடையிலான, கொமன்வெல்த் முதலிய விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றுதை ஊக்கப்படுத்துகின்றன.

**பல்பண்பாட்டு மையங்கள்:** இலங்கைச் சமூகத்தின் பல்லினத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் சகல அரச பல்கலைக்கழகங்களும் சகல சமூக, பண்பாட்டு இனத்துவ, சமயப் பின்னணி கொண்ட மாணவர்களையும் உள்ளடக்குகின்றன. பல்வேறுபட்ட சமூக, பண்பாட்டு, இனத்துவ சமயப் பின்னணிகளில் இருந்து வரும் மாணவர்கள் மத்தியில் ஒற்றுமையும், நல்லுறவும் ஊக்கப்படுத்தப்படுகின்றன. பல்கலைக்கழகங்களில் இருக்கும் காலத்தில் பட்டதாரி மாணவர்களின் வாழ்க்கையை சௌகரியமாக்குவதோடு, அவர்கள் இங்கு பெறும் அனுபவம்

அவர்களை சமூக மாற்ற முகவர்களாக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் அவர்கள் முழுச் சமூகத்திலும் சமூக, இனத்துவ நல்லுறவை விதைத்து அதனை முன்னெடுத்துச் செல்லமுடியும். பல்கலைக்கழகங்கள் இக்குறிக்கோளை நிறைவேற்றும் முக்கிய நிலையங்களாகச் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றன. இப்பின்னணியில் தான் அநேக தேசிய பல்கலைக்கழகங்கள் பல்பண்பாட்டு நிலையங்களை நிறுவும் முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளன. இவை வேறுபட்ட இனத்துவ சமூகக்குழுக்கள் மத்தியில் பாரிய சமூக, இனத்துவ ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தும் குறிக்கோளை முன்னெடுக்கும் வகையில் பல்வேறுபட்ட செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தும்.

**மாணவ நலச் சேவைகள்**: மாணவர்களின் அனுமதி, விடுதி வசதி, ஏனைய அத்தியாவசிய சேவைகள் தொடர்பான அனைத்து விடயங்களிலும் அவர்களுக்கு உதவுவதற்கு தனியான நிருவாக மற்றும் சேவைப்பிரிவுகள் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உள்ளன. சில பல்கலைக்கழகங்கள் நன்கு நிறுவப்பட்ட மாணவ நல சேவையினையும் தகவல் வழங்கு முறைமையினையும் கொண்டுள்ளன. வழமையாக இவை மாணவ நல சேவைப்பணியாளர் அல்லது இணைப்பாளர் ஒருவரால் தலைமை தாங்கப்படுகின்றன.
எல்லா அரச பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகத்துள் மாணவர் வாழ்வை சுய நிறைவாக்கும் நோக்கில், உணவகச் சேவைகள் மளிகைக் கடைகள், தபால் அலுவலகங்கள், இணைய சேவைகள், தையல் கடைகள், சிகையலங்கார நிலையங்கள் முதலியவற்றை வழங்குவதற்குரிய ஒழுங்குகள் உள்ளன.

எல்லா அரச பல்கலைக்கழகங்களிலும் கலாச்சார நிலையங்கள், சூழலியல் ஆய்வுச் சங்கங்கள், நாடக சங்கங்கள், இசைச் சங்கங்கள் முதலிய பல்வேறுபட்ட அமைப்புக்கள் உள்ளன. இவை படைப்பாக்க மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த பல்வேறுபட்ட நடவடிக்கைகளுக்கு பரந்த வாய்ப்பினை வழங்குகின்றன. இத்தகைய கற்கை சாரா நடவடிக்கைகள், நிகழ்ச்சிகள் மூலம் மாணவர் மத்தியிலும், மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலும் நல்லுறவும், பல்வேறு இனத்துவ சமூகங்கள் மத்தியில் ஒருமைப்பாடும் நல்லிணக்கமும் மேம்படுத்தப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, சகல அரச பல்கலைக்கழகங்களும் கல்வித்துறை தேடல்களுக்கு மிக அத்தியாவசியமான அழகியல் ரீதியில் வளமான ஒரு சூழலை உருவாக்குவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றன.

## 8 பின்னிணைப்பு

### 8.1. கல்வி நிறுவனங்களிலிருந்து பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் கொடூரமான மனிதாபிமானமற்ற கீழ்த்தரமான முறையில் நடாத்தப்படுதலையும் ஒழிப்பதற்கான சட்டம்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக

1. இச்சட்டம் 1998ம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதையையும் வேறுவகையான வன்செயல்களையும் தடைசெய்தல் சட்டம் எனலாம்.

2. (1) கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்குபற்றுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் கடுழிய மறியற்தண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட தவறுகளுக்கு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றிதனான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்படலாம்.

(2) பகிடிவதை புரிகையில் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரொருவருக்கு பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தினை ஏற்படுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவரொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 10 ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு மறியற்தண்டனைக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் எந்த ஆளுக்கெதிராக தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினதான நட்டஈட்டை அத்தகைய ஆளுக்குச் செலுத்துமாறு கட்டளையிடப்படலாம்.

3. கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரொருவரின் (இப்பிரிவில் ‘‘பலியானவா்’’ எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) உடலுக்கு நற்பெயருக்கு அல்லது ஆதனத்திற்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளின் உடலுக்கு நற்பெயருக்கு அல்லது ஆதனத்திற்கு ஊறுவிளைவிப்பதாக பலியானவரை அச்சத்திற்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவா் எந்தச் செயலை செய்யுமாறு சட்டப்படி தேவைப்படுத்தப்படவில்லையோ அந்தச் செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலைச் செய்வதற்கு பலியானவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலை செய்துவிடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய்மூலமாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ அச்சுறுத்துகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 5 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

4. எந்தச் செயலின் மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தச் சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளாக சட்டமுறையான நியாயப்படுத்துதல் இல்லாமலும் அத்தகைய மாணவரை பணியாட்தொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டவொரு செயல் நெறிமுறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான

விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் பேரில் 7 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான கடூழிய மறியற்தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

5. கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரை அத்தகைய மாணவர் அல்லது உறுப்பினர் எந்தத் திசையை நோக்கிச் செல்வதற்கு உரிமை கொண்டுள்ளாரோ அந்தத் திசையில் செல்வதைத் தடைசெய்கின்றவரான அத்தகைய முறையில் சட்டவிரோதமாகத் தடுக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் 7 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான கடூழிய மறியற்தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

6. கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவரை குறித்த சில சுற்றுவட்ட எல்லைகளுக்கும் அப்பால் செல்வதை தடைசெய்யக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரை சட்டவிரோதமாக மறித்து வைக்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 7 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

7. **(1)**கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமான காரணமின்றி பலாத்காரமாக இருப்பாட்சி கொள்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 10 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்தண்டனைக்கு அல்லது 10000 ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது அத்தகைய மறியற்தண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.
**(2)** கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் சொத்தழிவு செய்கின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதவானொருவர் முன்னிலையிலான சுருக்க முறையிலான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மீது 20 ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்தண்டனைக்கும் 5000 ரூபா அல்லது அத்தகைய ஆதனத்திற்கு விளைவிக்கப்பட்ட இழப்பின் அல்லது சேதத்தின் தொகையில் 3 மடங்கு என்பவற்றுள் எத்தொகை கூடுதலானதோ அத்தொகையினதான குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

8. இச்சட்டத்தின் கீழ் ஆள் ஒருவர் தவறொன்றுக்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து நீதிமன்றமானது தவறின் பாரதுாரத் தன்மையைக் கருத்திற் கொண்டு
(அ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் கல்வி நிறுவனமொன்றின் மாணவர் ஒருவராக இருக்கும் விடயத்தில் அத்தகைய ஆள் அத்தகைய நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டுமென கட்டளையிடலாம்.
(ஆ) குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவராக இருக்கும் விடயத்தில் அத்தகைய ஆள் அத்தகைய கல்வி நிறுவனத்திலிருந்து பதவிநீக்கம் செய்யப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

9. (1) இச்சட்டத்தின் 2ம் பிரிவின் (2)ம் உட்பிரிவின் கீழ் அல்லது 4ம் பிரிவின் கீழ் தவறொன்றைப் புரிந்ததாக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் அரசியலமைப்பின் 154 என்னும் உறுப்புரை மூலம் தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றின் நீதிபதியொருவரால் தவிர பிணையில் விடுவிக்கப்படுதலாகாது. பிணை வழங்குவதில் தமது தற்றுணிபைப் பிரயோகிக்கையில் அத்தகைய நீதிபதி 1997ம் ஆண்டின் 30ஆம் இலக்க பிணைக்கட்டத்தின் 14ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திலெடுத்தல் வேண்டும்.

(2) ஆளொருவர் இச்சட்டத்தின் 2ம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 4ஆம் பிரிவின் கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படும் போது அத்துடன் அத்தகைய குற்றத்தீர்ப்பிற்கெதிராக மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்டுள்ளவிடத்தும் அத்துடன் அத்தகைய ஆளுக்கு குற்றத்தீர்ப்பளிறக்கும் நீதிமன்றமானது தவறின் பாரதூரமான தன்மையையும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளின் முன்வரலாறுகளையும் கருத்திற்கொண்டு அத்தகைய ஆளைப் பிணையில் விடுவிக்கலாம் அல்லது விடுவிக்க மறுக்கலாம்.

10. 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும்-(அ) அச்சட்டத்தின் 303ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 2ம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது 4 ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது அதன் முன்னிலையில் குற்றத்தீர்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் விடயத்தில் ஏற்புடைத்தாகமாட்டாது.
(ஆ) அச்சட்டத்தின் 306ம் பிரிவின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின் 2ம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது அதன் முன்னிலையில் குற்றவாளி என வழக்குரைக்கும் அல்லது குற்றவாளியாகக் காணப்படும் எவரேனும் ஆளின் விடயத்தில் ஏற்புடையனவாகமாட்டா.

11. 1979 ஆண்டின் 15ம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 1ம் அட்டவணையில் அடங்கியுள்ளது எது எப்படியிருப்பினும் அச்சட்டத்தினது ஏற்பாடுகளின் ஏற்புடைமையின் நோக்கங்களுக்காக இச்சட்டத்தின் கீழான சகல தவறுகளும் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் வழக்குத் தொடுப்பதில் ஆளெவரும் கல்வி நிறுவனமொன்றில் மாணவர் ஒருவராக அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவராக அல்லது எவையேனும் வளவுகள் அல்லது ஏதேனும் ஆதனம் கல்வி நிறுவனமொன்றின் அல்லது அதன் முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டினதும் கீழுள்ள ஆதனமா என்னும் கேள்வி எழுமிடத்து அதன்கண் பெயர் குறிப்பிடப்பட்ட ஆள் அத்தகைய கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒருவர் அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவர் ஆவார் அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட வளவுகள் அல்லது ஆதனம் அத்தகைய கல்வி நிறுவனத்தின் அல்லது அதன் முகாமைத்துவத்தினதும் கட்டுப்பாட்டினதும் கீழுள்ள ஆதனமாகும் என்னும் பயன்பட அத்தகைய கல்வி நிறுவனத்தின் தலைமையதகாரியின் அல்லது வேறு அலுவலரின் கைப்பட்டதாக கருதப்பட்ட சான்றிதலொன்று கையொப்பத்தின் எண்பிப்பு இல்லாமலே சான்றாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்ற சான்றாதலும் வேண்டும்.

13. (1) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றக்கான விளக்கமொன்றின் போது அத்தகைய தவறு பற்றிய ஏதேனும் புலனாய்வில் முன்னர் அவரால் கொடுக்கப்பட்ட கூற்றொன்றில் ஏதேனும் முக்கியமான விடயத்தில் வெளிப்படையாகவோ அல்லது அவசியமான உட்கிடையாகவோ முரண்படுவாராயின் அக்கூற்று செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி உரிய விசாரணை செய்த பின்னர் எல்லாச் சூழ்நிலைகளிலும் பாதுகாப்பானதும் நீதியானதும் என நீதவான் கருதினால் -
(அ) அத்தகைய கூற்று சுயேச்சையான மூலமொன்றிலிருந்து வரும் சாட்சியத்தினால் முக்கியமான விவரங்களில் ஒப்புறுதிப்படுத்தப்படுமாயின் புலனாய்வின் போது சாட்சியால் கொடுக்கப்பட்ட கூற்றொன்றின் மீது செயலாற்றுவதும் அத்துடன் (ஆ) அத்தகைய விளக்கத்தின் முடிவில் நீதித்துறை நடவடிக்கையொன்றில் கட்டமொன்றில் வேண்டுமென்றே பொய்ச்சாட்சியம் கொடுத்தமைக்கான குற்றச்சாட்டொன்றின் மீது அத்தகைய நீதிமன்றத்தின் முன்னிலையில் அத்தகைய சாட்சியை விளக்கத்திற்கு உட்படுத்துவதும்,
(2) (1)ம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான ஏதேனும் விளக்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றச்சாட்டில் சார்த்துரைக்கப்பட்ட முரண்பாடான கூற்றுக்களைச் செய்தார் என எண்பிப்பது போதுமானதாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கூற்றுக்களில் எது பொய்யானது என எண்பிப்பது அவசியமற்றதாதலும் வேண்டும்.

14. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையின் 1994ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சித்திரவதை மற்றும் வேறு கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமாக நடாத்துதல் அல்லது தண்டித்தல் என்பவற்றிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இருத்தலும் அவற்றை மதிப்பு குறைப்பனவாக இல்லாதிருத்தலும் வேண்டும்.

15. இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுக்கு குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்திற்கும் அத்தகைய ஏதேனும் தவறுக்குமாக எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட குற்றத்தீர்ப்புக்கு எதிரான ஏதேனும் மேன்முறையீட்டின் கேட்புக்கும் அத்தகைய குற்றத்தீர்ப்பு மீது விதிக்கப்படும் ஏதேனும் தண்டனைத்தீர்ப்புக்கும் ஒவ்வொரு நீதிமன்றமும் முந்துரிமை அளித்தல் வேண்டும்.

16. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே நிற்றல் வேண்டும்.

17. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி - ''குற்றவியல் பலாத்காரம்'', ''அச்சம்'', ''பலாத்காரம்'', ''கடும்காயம்'', ''சொத்தழிவு'' என்பன தண்டனைச் சட்டக்கோவையில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்த பொருள்களை கொண்டிருத்தல் வேண்டும்.

கல்வி நிறுவனமென்பது,
(அ) உயர் கல்வி நிறுவனமொன்று:
(ஆ) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் அத்தியாயம் 11 என்பதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனம்:
(இ) 1981 ஆம் ஆண்டின் 74ம் இலக்க இலங்கை பௌத்த , பாளி பல்கலைக்கழகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட பௌத்த , பாளி பல்கலைக்கழகம்.
(ஈ) 1996 ஆம் ஆண்டின் 26ம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தால் தாபிக்கப்பட்ட புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்.
(உ) 1990 ஆம் ஆண்டின் 20ம் இலக்க 3ம் நிலை தொழிற்கல்விச் சட்டத்தின் 14ம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனம்
(ஊ) 1995ஆம் ஆண்டின் 29ம் இலக்க இலங்கை தொழிநுட்பக் கல்வி நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் உயர்தர தொழிநுட்ப நிறுவகம்
(எ) 1979ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க, பிரிவென கல்விச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதும் அரச நிதியத்திலிருந்து மானியங்களைப் பெறுகின்றதுமான பிரிவென ஒன்று அத்துடன், அச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிரிவென பயிற்சி நிறுவகமொன்றையும் உள்ளடக்கும்:
(ஏ) இலங்கைச்சட்டக் கல்லூரி:
(ஐ) 1985ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, தேசிய கல்வி நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம்:
(ஒ) 1986ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, கல்விக் கல்லூரிகள் சட்டத்தால் தாபிக்கப்பட்ட கல்விக் கல்லூரி ஒன்று அல்லது அரசாங்க பயிற்சி கல்லூரி
(ஓ) (185ஆம் அத்தியாயமான) கல்விக் கட்டளைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட அரசாங்கப் பாடசாலை ஒன்று அல்லது உதவி பெறும் பாடசாலை ஒன்று, உதவி பெறாத பாடசாலை ஒன்று, எனப் பொருள்படும் என்பதுடன் கல்வி போதனை அல்லது பயிற்சி வழங்கும் நோக்கத்திற்காக தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்தையும் உள்ளடக்கும்.
''கல்வி நிறுவனமொன்றின் தலைமையதிகாரி'' என்பது அத்தகைய கல்வி நிறுவனத்தின் நிர்வாகமும் முகாமைத்துவமும் பொறுப்பிக்கப்பட்ட துணைவேந்தர், மகோபாத்தியாயர் பணிப்பாளர், தலைவர், அதிபர் அல்லது எவ்வாறாவது பெயர் குறித்தொதுக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் என்று பொருள்படும். ''உயர் கல்வி நிறுவனம்'' என்பது 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் அதற்கு குறித்தொதுக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருக்கும்:

‘‘பகிடிவதை’’ என்பது கல்வி நிறுவனம் ஒன்றின் மாணவர் ஒருவருக்கு அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவருக்கு உடல் அல்லது உள ரீதியான ஊறு அல்லது மனநோய் அல்லது அச்சம் ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும் செயல் என்று பொருள்படும்.

‘‘மாணவர்’’ என்பது கல்வி நிறுவனமொன்றின் மாணவர் ஒருவர் என்று பொருள்படும்.

‘‘பாலியல் தொந்தரவு’’ என்பது கல்வி நிறுவனமொன்றில் மாணவர் ஒருவருக்கு அல்லது பணியாட்தொகுதி உறுப்பினர் ஒருவருக்கு பாலியல் ரீதியான தொல்லை அல்லது தொந்தரவை ஏற்படுத்துவதற்காக குற்றவியல் பலாத்காரத்தை, வார்த்தைகளை அல்லது செயல்களைப் பயன்படுத்தல் என்று பொருள்படும்.

## 8.2 பல்கலைக்கழகங்களில் தடைசெய்யப்பட்ட முறைகேடான, சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகள்

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பயிலும் மாணவர்கள் பின்வரும் முறைகேடானாதும் சட்டத்துக்கு முரணானதுமான நடவடிக்கைகளில் ஈடுபடாது விலகி இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு ஈடுபடுமிடத்து பல்கலைக்கழகங்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களின் சட்ட நடவடிக்கைகளுக்கும் ஆளாக வேண்டிவரும்.

1998ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க கல்வி நிறுவனங்களில் பகிடிவதை, வேறு வன்முறைகள் தடைச்சட்டம் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நீதிமன்றங்கள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பொலிசாருக்கு வழங்கியுள்ளது. பல்கலைக்கழகங்களிலும், உயர்கல்விநிறுவனங்களிலும் பகிடிவதையைத் தடுப்பதற்கான உறுதியான வழிமுறைகளைத் தரும் 2010 ஜனவரி 15ஆம் திகதி 919ஆம் இலக்க யுஜிசி சுற்றுநிருபம் பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு முறைகேடான, சட்டத்துக்கு முரணான குற்றச் செயலைப் புரியும் ஒருவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குரிய அதிகாரத்தை பல்கலைக்கழக நிருவாகத்துக்கு வழங்கியுள்ளது. மேலும் 2008 டிசம்பர் முதலாம் திகதிய 902 ஆம் இலக்க யுசிஜி சுற்றுநிருபத்தின் மூலம் பல்கலைக்கழக சொத்துக்களுக்கு விளைவிக்கப்படும் எந்த ஒரு சேதத்துக்குரிய தொகையை சேதம் விளைவித்த நபர்களிடமிருந்து அறவிடுவதற்கும் அல்லது மாணவர்கள் சங்கங்களுக்குரிய நிதி ஒதுக்கீடுகளிலிருந்து குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சகல பல்கலைக்கழகங்களுக்கும் யுஜிசி அறிவித்துள்ளது.

ஆகவே பல்கலைக்கழகத்தால் விதிக்கப்படும் தண்டனை நட்டத்தை அறவிடுவது அல்லது எச்சரிக்கை கடிதம் ஒன்றை அளிப்பது அல்லது இவை இரண்டையும் செய்வது முதல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு கல்விச் செயற்பாட்டிலிருந்து அல்லது பல்கலைக்கழக விடுதி வசதிகளிலிருந்து அல்லது இவை இரண்டிலும் இருந்து தற்காலிக இடைநிறுத்தம் செய்தல் அல்லது பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றுதல் வரை இருக்கலாம். நீதிமன்றம் விதிக்கும் தண்டனைக்கு மேலாக இவை அமையும்.

1. **இலக்கியத் திருட்டும் ஏமாற்றுதலும்**

   பல்கலைக்கழக மாணவர்கள் உயர்ந்த புலமைத் தரத்தை பேணுமாறும் தமது கல்வியிலும் பரீட்சையிலும் புலமைத்துவ நேர்மையைக் கடைப்பிடிக்குமாறும் வேண்டப்படுகின்றனர். பரீட்சைகளில் பார்த்தெழுதுதல், பிறருடைய எழுத்தை திருடுதல், அல்லது அனுமதிக்கப்படாத ஆவணங்களை வைத்திருத்தல், மாணவர் அறிக்கைகள் அல்லது ஒப்படைகள் அல்லது ஆய்வேடுகள் என்பவற்றில் தகவல்கள் எங்கிருந்து பெறப்பட்டன குறிப்பிடாமல் பார்த்து எழுதுதல் பிறருடைய ஆக்கங்களிலிருந்து பெயர்த்தெழுதுதல் என்பன அனுமதிக்கப்படமாட்டாது. இத்தகைய எல்லா மீறல்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு ஆக்கமும் ஒருவருடைய சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துமாறும், பிறருடைய ஆக்கத்தைப் பயன்படுத்தும் போதும் அது பற்றி பொருத்தமான வகையில் குறிப்பிட வேண்டும் என்றும் சகல மாணவர்களுக்கும் ஆலோசனை கூறப்படுகின்றது.

## 2. முறைகேடான நடத்தை, முரண்பாடு மற்றும் எதிர்ப்பு

சமகால சமூக ஒழுக்க நியமங்களை அல்லது பல்கலைக்கழக நியமங்களை அல்லது இவை இரண்டையும் மீறும் மாணவரின் நடத்தை சகித்துக்கொள்ளப்படமாட்டாது. பல்கலைக்கழக வளாகத்தினுள் அல்லது பல்கலைக்கழகத்தால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளில் அநாகரிகமாக அல்லது ஆபாசமாக அல்லது மூர்க்கத்தனமாக நடந்துகொள்வதும் சகித்துக்கொள்ளப்படமாட்டாது. சிவில் சட்டங்கள் அல்லது பல்கலைக்கழக விதிமுறைகளுக்கு எதிரான நிகழ்ச்சிகளை அல்லது செயற்பாடுகளை ஏற்பாடு செய்வது, ஆதரவு வழங்குவது அல்லது நிகழ்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளதோடு அவை ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உரியதுமாகும்.

## 3. அவமதிப்பும் அடங்காமையும்

பல்கலைக்கழக அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்கையில் விடுக்கும் அறிவுறுத்தல்களுக்கு அடங்காமை தடைசெய்யப்பட்டுள்ளது. கீழே தரப்படுவனவும் அவை போன்றனவுமான சந்தர்ப்பங்களில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.1. மோசமான அல்லது அவமதிக்கும் மொழியைப் பயன்படுத்துதல்.

3.2. அநாகரிகமான, அவமதிக்கும் சைகைகளில் ஈடுபடுதல்.

3.3. திசைமாற்றும் அல்லது பிழையான தகவல்களை பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு வழங்குதல்.

3.4. பல்கலைக்கழக அதிகாரி ஒருவரின் நியாயமான கோரிக்கைக்கு இணங்க மறுத்தல் அல்லது அதை அவமதித்தல்.

3.5. குறிக்கப்பட்ட தேதியில் சமூகமளிக்காமை உட்பட ஒரு குறிப்பிட்ட கால எல்லையுள் ஒரு நியாயமான கோரிக்கைக்கு எதிர்வினை ஆற்றாமை.

3.6. உள்நோக்குடனும் அறிந்து கொண்டும் கற்பித்தலில் தலையிடுதல்.

3.7. ஒரு சம்பவம் பற்றிய விசாரணையைத் தடுத்தல் அல்லது குழப்புதல்.

## 4. பொருட்கள்,சேவைகள், தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துதல்.

பல்கலைக்கழகத்துடனும் பொதுமக்களுடனும் தாங்கள் தொடர்பு கொள்ளும் போது உண்மையையும், நேர்மையையும் கடைப்பிடிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். மாணவர்களதும் அவர்களது விருந்தினரதும் பின்வரும் நடத்தைகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

4.1 ஒருவர் அல்லது ஒரு குழுவினரின் அனுமதியைப் பெறாது அவர்களது ஏதாவது ஒரு உடைமையை வைத்திருத்தல் அல்லது அனுமதி பெறாது ஏதாவது ஒரு சேவையை வழங்குதல்.

4.2 ஏமாற்றுதல் மூலம் பணம், பொருள் அல்லது சேவைகளைத் திருடுதல், கையாடுதல் அல்லது மோசடி செய்தல்.

4.3 திருடப்பட்டவை அல்லது மோசடி மூலம் பெறபடபட்டவை என்று தெரிந்து கொண்டே அத்தகைய பொருட்களை, பணத்தை அல்லது சேவைகளை வைத்திருத்தல், வாங்குதல் அல்லது பெறுதல்.

4.4 பல்கலைக்கழக வளாகத்திற்குள் கொடுக்க வேண்டிய பணத்துக்காக அல்லது வேறு தேவைகளுக்காக வழங்கப்படும் காசோலையை, வங்கியில் கொடுக்கும் போது அதற்குப் பணம் வழங்கப்படமாட்டாது என்று தெரிந்து கொண்டே வழங்குவது.

4.5 உரிய வகையில் அனுமதி பெறாது திறப்புகள், கணினிக்குறிகள் அல்லது வேறு பொறிமுறைகளைப் பிரதிசெய்தல்.

4.6 ஒரு நிருவாகப் பதிவேட்டில் ஏதாவது ஒரு பிழையான தகவலை சேர்க்குமாறு செய்தல், திருத்துதல் அல்லது மோசடி செய்தல் அல்லது நிருவாக, ஒழுக்காற்று நடவடிக்கை நிகழ்வுகளில் அத்தகைய தகவல்களை முன்வைத்தல்

4.7 கணினி முறைமை, கணினி சேவையைப் பெறும் குறிகள் அல்லது கணினி சேவைக்கான வரையறுக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றை அனுமதியற்றுப் பயன்படுத்துதல்.

4.8 பிழையான அடையாளத்தை வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல்.

4.9 பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்டவர் தவிர்ந்த வேறு யாரும் அலுவலகங்கள் அல்லது துறைகளுக்குரிய ஆய்வுகூடங்கள் அல்லது பீடக்கட்டிடங்கள், விடுதி அறைகள்

ஆகியவற்றுள் செல்லக்கூடிய திறப்புகளை அல்லது வேறு பொறிமுறைகளை (எண்குறிகள், ஸ்வீப் அட்டைகள் முதலியவை) வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல்.

**5. அனுமதியற்ற நிதி சேகரிப்பு**

ஒரு பல்கழைக்கழகத் தேவைக்காக மாணவர்களால் அல்லது நிருவாகத்தால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு நிதி சேகரிப்பும் உரிய முறையில் துணைவேந்தரின் அனுமதிபெற்றே மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிநிறுவனங்களிடம் நிதி உதவி கேட்கும் எந்தவொரு கோரிக்கையும் துணைவேந்தரின் அனுமதியுடனும் அவரது கையொப்பத்துடனும் அந்த நிறுவனத்திற்கு விலாசமிட்ட கடிதம் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய அனுமதியில்லாது அரசியல் நோக்கங்களுக்காகவோ அல்லது தரும அல்லது சமூக நடவடிக்கைகளுக்காகவோ பல்கழைக்கழகத்துக்குள்ளோ அல்லது வெளியிலோ நிதி சேகரிப்பு முயற்சியில் ஈடுபடுவது அனுமதிக்கப்படவில்லை.

**6. வெளியார் வருகை**

துணைவேந்தரின் அனுமதியில்லாது பல்கழைக்கழகம் சாராத வெளியார், நிறுவனம், வர்த்தகம் எவையும் பல்கழைக்கழக வளாகத்துக்குள் வருவருது அனுமதிக்கப்படமாட்டாது. கூட்டங்கள் வைத்தல், எவ்வகையான துண்டுப்பிரசுரங்களும் விநியோகித்தல், பொருட்கள் அல்லது சேவைகளை பரிவர்த்தனை செய்தல், பண்டமாற்று அல்லது விற்பனை செய்தல் என்பவற்றையும் இது உள்ளடக்கும்.

**7. பல்கலைக்கழகத்தினுள் மதுபானம், போதைப்பொருள், புகையிலை என்பவற்றை வைத்திருத்தலும் நுகர்தலும்**

இலங்கையர் சமூகம் மதுபானம், போதைப்பொருள், புகையிலை முதலியவற்றின் நுகர்வை ஆதரிப்பதில்லை. இத்தகைய பொருட்களின் பாவனை மனித மனத்துக்குப் போதையூட்டுவதும், மனித நடத்தையை பிறழ்விப்பதும் அதன் காரணமாக அவர்களின் உடல், உள ஆற்றலை சீர்குலைப்பதும் இதற்குக் காரணமாகும். அதனால் பல்கழைக்கழக வளாகத்தினுள் மதுபானம், போதைப்பொருள், புகையிலை என்பவற்றை வைத்திருப்பதையும் தடை செய்யும் நடைமுறையை அரச பல்கலைக்கழகங்கள் கடைப்பிடிக்கின்றன. ஆகவே பல்கலைக்கழக வளாகத்தினுள்ளும் பல்கலைக்கழகத்தின் எந்த ஒரு இடத்தினுள்ளும் மதுபானத்தை கொண்டு வர வேண்டாம் என மாணவர்களுக்கு உறுதியாக ஆலோசனை கூறப்படுகிறது. மதுபானம் அல்லது போதைப்பொருள் அல்லது அவை இரண்டையும் அருந்திய நிலையில் பல்கலைக்கழக பிரதேசத்தினுள் பிரவேசிக்க வேண்டாம் என மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**8. சூதாட்டம்:**

பல்கலைக்கழக வளாகத்தினுள் சூதாட்டம் அனுமதிக்கப்படுவதில்லை. பந்தயம் பிடித்தல், பந்தயத்தை ஏற்றல், எவ்வகையான பந்தயத் திட்டங்களையும் நடாத்துதல், பணங் கொடுத்தல் என்பன அனுமதிக்கப்படமாட்டாது. சூதாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் அல்லது மாணவர்கள் நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் பல்கலைக்கழக விதிமுறைகளுக்கேற்ப தண்டிக்கப்படுவார்கள்.

**9. துன்புறுத்தல் அல்லது வன்முறை**

பல்கலைக்கழகத்திற்கு உள்ளோ வெளியிலோ தனி நபர்களையோ அல்லது தனி நபர் குழுக்களையோ துன்புறுத்துவது அல்லது வன்முறைக்குத் தூண்டுவது சிவில் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். துன்புறுத்துதல், வன்முறை தொடர்பான சிவில் சட்டம் பல்கலைக்கழகத்தின் உள்ளும் புறமும் ஒரே அளவில் செல்லுபடியாகும். பல்கலைக்கழக பீட உறுப்பினர்கள், நிருவாக ஊழியர்கள், மாணவ அமைப்புக்கள் அல்லது விருந்தினர்கள் ஆகியோருக்கு எதிராக நேர்முகமாகவோ மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படும் பின்வரும் நடவடிக்கைகளும் இவை போன்றனவும் இதில் அடங்கும்.

1. ஒரு தனிநபரை அல்லது ஒரு குழுவினரை அச்சுறுத்தல் அல்லது அவர்கள் மீது உடற்பலத்தை பிரயோகித்தல் அல்லது இரண்டையும் செய்தல்.

2. தனிநபர்கள் அல்லது குழுவினருக்கு உடற்காயங்களை அல்லது உளவியல் தாக்கத்தை அல்லது இரண்டையும் ஏற்படுத்தும் வகையில் வன்முறையில் அல்லது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுதலும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தலும்.
3. தனிநபர்கள் அல்லது குழுவினருக்கு அழுத்தம் கொடுத்தல், நெருக்கடி கொடுத்தல், துன்புறுத்தல்.
4. பிறரை தொந்தரவு செய்தல் அல்லது சினமூட்டுதல்.
5. தொலைபேசி, கடிதம் மின்னஞ்சல் அல்லது வேறு வகையான தொடர்பாடல் முறைகள் மூலம் துன்புறுத்துதல்.

மேற்குறிப்பிட்ட அல்லது வேறுவகையான துன்புறுத்தல்கள் வன்முறைகள் பற்றிய முறைப்பாடுகள் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிசாருக்குப் பாரப்படுத்தப்படுவதோடு துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட ஒழுக்காற்றுக் குழுவிடம் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காகவும் ஒப்படைக்கப்படலாம்.

**10. பகிடிவதை:**

பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான உன்னத புலமைத் தேடலுக்கான சுவர்க்க பூமிகளாகும். பகிடிவதை அல்லது துன்புறுத்தல் மாணவர்களின் சுதந்திரத்தை அல்லது சுயாதீனத்தை குறைத்துப் பலவீனப்படுத்தியுள்ளதோடு புலமைத் தேடலில் உன்னதத்தை அடைவதையும் அது தடுக்கின்றது. 1998ல் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட பகிடிவதைக்கு எதிரான சட்டத்தின் கீழ் இப்போது பகிடிவதை தண்டனைக்குரிய ஒரு கிறிமினல் குற்றமாகும். துரதிஷ்டவசமாக பல தேசிய பல்கலைக்கழகங்களில் துன்பறுத்தல் அல்லது பகிடிவதை நடைபெறுகிறது. தாழ்வு மனப்பான்மையினாலும், மனப்பிறழ்வினாலும் பாதிக்கப்பட்ட தனிநபர்களினாலும், அழிவு காரணமான அரசியல் இயக்கங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவர்களாலும் இந்த அடக்குமுறை நிகழ்கிறது. உண்மையில் பகிடிவதை புரிவோர் சில அரசியல் செயற்பாட்டாளர்களால் கையாளப்படும் கைப்பாவைகளே. துன்புறுத்தல் அல்லது பகிடிவதை என்பது (ஒரு தனிநபர் அல்லது குழுவினரால்) வளாகத்துக்குள்ளோ வெளியிலோ பிறிதொருவரை துஞ்சிக்கும், மோசமாக நடாத்தும், தரம் குறைக்கும், துன்புறுத்தும், நாணவைக்கும் அழுத்தம் கொடுக்கும் உடல்ரீதியான, உள அல்லது உணர்வு ரீதியான எந்த ஒரு செயலையும் குறிக்கும். பின்வருவனவற்றையும் இவைபோல்வனவற்றையும் உள்ளடக்கும் இத்தகைய செயல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

1. அர்த்தமற்ற அல்லது நாணத்தக்க செயல்களைப் புரியுமாறு ஒருவரை வற்புறுத்தல்.
2. தனிநபர்களை அல்லது குழுவினரை அவர்கள் விரும்பாததைச் செய்யும் படி நெருக்குதல், வற்புறுத்துதல், அழுத்தம் கொடுத்தல்.
3. உடல் ரீதியாக அல்லது உளரீதியாக அதிக சோர்வை ஏற்படுத்துதல்.
4. உடல் அல்லது உள அதிர்ச்சியை ஏற்படத்துதல்.
5. விரும்பாத ஆடைகளை அணியுமாறு வற்புறுத்துதல்.
6. ஒழுக்கக்கேடான அல்லது வெட்கப்படுத்துகிற செயல்கள், விளையாட்டுக்கள் அல்லது நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு ஒருவரை அல்லது பலரை வற்புறுத்தல்.
7. தனிநபர்களை அல்லது குழுவினரை சிவில் சமூகத்தின் நியமங்களுக்கு புறம்பான, கல்விச் செயற்பாட்டில் குறுக்கீடு செய்யக்கூடிய அதிகாலை அல்லது பின்மாலை வேலை அமர்வுகளில் ஈடுபட வற்புறுத்ததல்.
8. பல்கலைக்கழகத்தின் கொள்கைக்கு புறம்பான, பல்கலைக்கழகத்தின் பணியை மோசமாக பாதிக்கக்கூடிய, அதன் படிமத்தை ஊறுபடுத்துகின்ற உடல் குறியிடுதல் அல்லது மை பூசுதல் அல்லது வேறு செயற்பாடுகள்.

மேலே குறிப்பிட்ட வகையான முறைப்பாடு செய்யப்பட்ட எல்லா நிகழ்வுகளும் 1998ல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பகிடிவதைக்கு எதிரான சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பொலிசாருக்கப் பாரம் கொடுக்கப்படும். அதேவேளை பல்கலைக்கழகமும் பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும். இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதை இலகுவாக்கும் வகையில் பல வழிகாட்டல் ஆவணங்களையும் சுற்றுநிருபங்களையும்

வெளியிட்டுள்ளது. அத்தோடு இத்தகைய துன்புறுத்தல் பகடிவதை நிகழ்வுகள் எவையும் நடைபெறாமல் தடுப்பதற்குரிய உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகங்களை கேட்டுள்ளது.

**11. பாலியல் துன்புறுத்தல் அல்லது பாலியல் துர்நடத்தை:**

பல்கலைக்கழகக் குடித்தொகை பொதுவாக ஆண், பெண் இருபாலினரையும் சம அளவில் கொண்டுள்ளது. தார்மீக, ஒழுக்க அடிப்படையிலன்றி பாலியல் நடத்தையில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் நடைமுறையில் வரையறுக்கப்படமுடியாது. சகல தார்மீக, ஒழுக்க மதவிழுமியங்களும் மனிதர்கள் மத்தியில் வேரூன்றியிருப்பினும், பிறர் மீது தம் விருப்பத்தைத் திணித்து பாலியல் துன்புறுத்தலுக்கும் துர்நடத்தைக்கும் காரணமாகும் மனிதர் இன்னும் இருக்கின்றனர். பல்கலைக்கழக நிருவாகத்துள் வரும் யாரேனும் ஒருவர் தமது பாலியல் விருப்பத்தை பிறிதொருவர் மீது திணிக்க முயல்வதன் மூலம் பாலியல் துன்புறுத்தலிலும் துர்நடத்தையிலும் ஈடுபடுவாரானால் அவர் எதிர்ப்பாலினம் அல்லது ஒரே பாலினத்தவராயினும் அது பற்றி ஒரு முறைப்பாடு கிடைக்குமாயின் நடைமுறையிலிருக்கும் சட்டத்தின் அடிப்படையில் நீதியை நிலைநாட்டுவதற்கும் குற்றவாளியைத் தண்டிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**12. திருட்டு:**

பௌதீகப் பொருட்களை களவாடுதல் அதே போல் பருப்பொருள் சாராத ஆய்வறிவுச் சொத்துக்கள் (பிறரின் புலமைத்துறை, ஆராய்ச்சி வேலைகள், கண்டுபிடிப்புக்கள்) போன்றவற்றை திருடுதல் என்பன சிவில் சட்டத்தின் கீழும், பல்கலைக்கழக ஒழுக்காற்று நடைமுறைகளின் கீழும் தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆத்தகைய செயல்கள் சம்பந்தப்பட்டவருக்கு மிகப் பாதிப்பாக அமைவதோடு அவரது முழுத் தொழிற்கலத்தையும் வாழ்க்கை முழுவதையும் பாதிப்பாக அமையும். அவ்வகையில் தாம் எடுத்தாளும் ஆய்வறிவுச் சொத்துக்களின் மூலங்களைக் குறிப்பிடும் போது நேர்மையையும் வெளிப்படைத் தன்மையையும் பேணுமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றனர்.

**13. சொத்துக்களைச் சேதப்படுத்துதல்**

பல்கலைக்கழகத்தின் சொத்துக்களை சேதப்படுத்தல் அல்லது பிறரை அவ்வாறு செய்யத் தூண்டுதல் என்பன பொதுச் சொத்துக்கள் தனியார் உடமைகள் தொடர்பான சட்டத்தின் படியும் பல்கலைக்கழக ஒழுக்காற்று நடைமுறைகளின் படியும் கையாளப்படும். இத்தகைய நடவடிக்கைகளால் வகுப்பறைத் தளபாடங்கள், விடுதித் தளபாடங்கள், ஆய்வுகூட உபகரணங்கள், கணினிகள் அவற்றின் பாகங்கள், விளையாட்டு மைதான உபகரணங்கள் போன்றவற்றுக்கு ஏற்படும் சேதம் குற்றவாளிகளாகக் காணப்படும் மாணவர்களிடமிருந்து அறவிடப்படும். மாணவர் போராட்டம் இந்த அழிவுகளுக்கு காரணமாக இருந்தால், உபகரணங்களுக்குரிய பெறுமதியும் தண்டமும் போராட்டத்துக்கு பொறுப்பாக இருந்த அமைப்பாளரிடமிருந்து அறவிடப்படும். தனித்த செயற்பாடுகளால் ஏற்பட்டதாய் இருந்தால் அந்த சொத்தைப் பயன்படுத்துவதற்கு உத்தியோக பூர்வமாக அனுமதியளிக்கப்பட்ட மாணவர் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதோடு சேதத்துக்குரிய நட்ட ஈட்டையும் அவரே செலுத்த வேண்டும்.

**14. அனுமதியற்று உட்பிரவேசித்தல்:**

பல்கலைக்கழகங்கள் தமது தமது சொத்துக்களை பயன்படுத்த உரித்துடையவர்கள் தொடர்பாக கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. பொதுவாக சகல மாணவர்களும் வேலை நேரத்தில் வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள், உடற்பயிற்சி கூடங்கள் போன்றவற்றை வரையறையற்று பயன்படுத்த முடியும். மாணவர்கள் தமது விடுதிகளுக்கு எப்போதும் போய் வரலாம், ஆனால் விடுதி காப்பாளரின் அனுமதியின்றி விருந்தினர்கள் அவ்வாறு செய்ய முடியாது. இது போல் பாதுகாப்பு விடயங்கள் உட்பட பல்வேறு காரணங்களால் பொது இடங்களைப் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்படலாம். மற்றப் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமக்குச் சொந்தமில்லாத வேறு ஒரு பல்கலைக்கழகத்தைப் போய்ப் பார்க்க விரும்பினால் இரண்டு பல்கலைக்கழக

நிருவாகத்திடமிருந்தும் அனுமதி பெற வேண்டும். இதை மீறிப் பிரவேசிக்கும் யாரும் நாட்டின் பொதுச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட முடியும். அத்தோடு பல்கலைக்கழக ஒழுக்காற்று முறைமைகளுக்கு ஏற்பவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**15. நிருவாக அதிகாரிகளுடனும் விசாரணைக் குழுக்களுடனும் ஒத்துழைத்தல்**

ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாக பல்கலைக்கழகங்கள் பல்வேறு குழுக்களை நியமிக்கின்றன. வாய்மூல அல்லது எழுத்து மூல விளக்கங்களை அளிப்பதற்கு மாணவர்களுக்கு அழைப்பு விடும் அதிகாரத்தையும் அவை அதிகாரிகளுக்கு வழங்குகின்றன. அத்தகைய சம்பவங்களின் போது மாணவர்கள் அதிகாரிகளுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும். அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவோ அல்லது பணிவின்மை காரணமாகவோ மாணவர்கள் ஒத்துழைக்கத் தவறினால் அது பல்கலைக்கழக நிருவாகத்தை உதாசீனம் செய்வதாக அமைவதோடு பிரிதொரு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கும் காரணமாகலாம். தகவலுக்கான கோரிக்கை விடப்படும் போதல்லாம் நிருவாக அதிகாரிகளுடன் ஒத்துழைக்குமாறு மாணவர்களுக்கு உறுதியாக ஆலோசனை கூறப்படுகிறது.

**16. மேல்முறையீட்டுக்கான உரிமை**

மேல்முறையீட்டுக்கான உரிமை அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக உயர்நீதிமன்ற நிலைவரை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது பல்கலைக்கழகங்களுக்கும் ஏற்புடையது. ஆகையால் ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக ஒழுக்காற்று அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக ஒருவர் துணைவேந்தருக்கு மேல்முறையீடு செய்யலாம். இது கூட்டாகவோ அல்லது தனியாகவோ செய்யப்படலாம். இத்தகைய மேல்முறையீடுகளுக்கு பொருத்தமான வழிமுறைகள் மூலம் துணைவேந்தர் நீதியான விசாரணைக்கு ஏற்பாடு செய்வார்.

**8.3. மாணவர் ஒழுக்காற்று வதிவிடம் தொடர்பான நிபந்தனைகள் பற்றிய துணை விதிகள்**

(1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 135 (1) (ஈ) பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள்)

இத்துணை விதிகள் மாணவர் ஒழுக்காறு. வதிவிட நிபந்தனைகள் பற்றிய 1-ம் துணைவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 1883 மே 01 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**1.0 <u>வதிவிட நிபந்தனைகள்.</u>**

1.1 மாணவர் என்பது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் எல்லாப் பட்டப்படிப்பின் பட்ட டிப்ளோமா மாணவர்களில் ஒருவரென்றும் கருத்துடையதாகும்.

1.2 வதிவு என்பது விதிக்கப்பெற்ற கற்கை நெறியைப் பயிலும் நோக்கத்திற்காகவோ நூலகத்தைப் பயன்படுத்துவதற்காகவோ அத்தோடு அல்லது வேறு எந்தவொரு வசதிக்காகவோ அத்தோடு அல்லது பல்கலைக்கழகத்தின் சட்டமுறையான பதிவாளர் என்ற முறையிலோ மாணவரொருவர் வளாக வளவினுள் எந்தவொரு நாளிலாவது வசித்தல் என்றும் கருத்துடையது.

1.3 எல்லா மாணவர்களும் விதிக்கப்பெற்ற கற்கை நெறியை மூதவை திருப்தியுறும் வகையிலே பயில்தல் வேண்டும். வராமைக்கு அதிகாரமளிக்கப்பட்ட லீவைப் பெறாமல் ஒரு கல்வித் தவணைக் காலப்குதியில் கற்கை நெறிக்கு வராமலிருக்கும் மாணவர் எவரேனும் பாடநெறியை விட்டு விலகியவராக கருதப்படல் வேண்டும்.

1.4 மாணவரின் உரிய பீடத்தலைவரினால் ஒரு கிழமை வரைக்கும் துணைவேந்தரினால் அதற்கு மேற்பட்ட காலத்திற்கும் விடுதலை அனுமதிக்கப்படலாம்.

1.5 தொற்று நோயினாற் பீடிக்கப்பெற்ற மாணவர் எவரும் பல்கலைக்கழக வைத்திய அதிகாரியை உடனடியாகத் தொடர்பு கொண்டு அவரின் அறிவுரையை கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும். இவ்வாறு செய்ய இயலாது விடத்து மாணவர் தகைமைபெற்ற வைத்திய அலுவலரின் ஆலோசனையைப் பெற்று கூடிய விரைவில் பல்கலைக்கழக வைத்திய அலுவரிடம் இது பற்றி அறிவித்தல் வேண்டும்.

1.6 பல்கலைக்கழக விடுதியில் வசிக்கும் மாணவர்கள் காலத்துக்கும் காலம் விடுதி அதிபரினால் விடுவிக்கப்படும் வதிவுப் பிரமாணங்களை முழுமையாகப் பின்பற்றுதல் அவசியமாகும்.
1.7 விடுதியில் வசிப்பவர்களைத் தவிர்ந்த எல்லா மாணவர்களும் ஒவ்வொரு நாளும் ஏற்புடைய அலுவலெதிலும் ஈடுப்பட்டிருந்தாலன்றி 22.00 மணிக்கு (அல்லது துணை வேந்தரினால் அறிவிக்கப்படும் வேறொரு நேரத்திற்கு முன்னதாக பல்கலைக்கழக விடுதியில் வசிக்கும் மாணவர்கள் வளாக வளவினுள் 22.00 மணிக்குப் பின்னர் பிரவேசிக்க விரும்பினால் அவர்கள் பல்கலைக்கழக அடையாள அட்டைகளை அல்லது மாணவர் பதிவுப் புத்தகங்களை காட்டுதல் வேண்டும். அல்லது பாதுகாப்பு பணியாளரினால் வேண்டப்படும் போது அவர்களின் கையெழுத்தையும் பதிவிலக்கத்தையும் இட்டுத் தம்மைத்தாமே அடையாளங்காட்டுதல் வேண்டும்.
1.8 பல்கலைக்கழகத்தினைச் சேராத ஆட்களான பார்வையாளர்களை வரவேற்றும் மாணவர்கள் அது பற்றிய பிரதம பாதுகாப்பு அலுவலரிடமோ கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் பணிக்குழுப் பொறுப்பதிகாரியிடமோ அறிவிப்பது அவசியமாகும்.
1.9 வளாகத்தில் வதியும் காலத்தில் எல்லா மாணவர்களும் பொருத்தமான முறையில் உடையணிந்திருத்தல் வேண்டும்

## 2.0. பதிவு செய்தலும் ஒழுக்காற்று நிபந்தனைகளும்

2.1 பல்கலைக்கழக மாணவர் எல்லா நேரங்களிலும் பல்கலைக்கழகத்தின் கௌரவத்தையும், நற்பெயரையும், புகழையும் பேணிக்காப்பற்றப் பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

2.2 மாணவர்கள்,நல்லொழுக்கம் உடையவர்களாகவும், கண்டிப்பாக ஒழுக்காற்றைக் கடைப்பிடிப்பவர்களாகவும் இருப்பதற்கு அமையவே பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் பட்டதாரி நிலைக்கீழ் அல்லது பட்டதாரி மாணவர்களாக அனுமதிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுவர்.

2.3 இத்துணை விதிகளின் 1ஆம் பட்டோலையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இத்துணை விதிகளின் ஏற்பாடுகளை வாசித்து விளங்கிக் கொண்டதாகவும் எப்பொழுதும் இத்துணை விதிகளின் ஏற்பாட்டிற்கு இணங்கி ஒழுகுவதாகவும் மாணவன்/மாணவி உறுதியுரையொன்றில் உரியவாறு கையப்பமிட்டாலன்றி பல்கலைக்கழக அனுமதி பெற்ற எந்தவொரு மாணவரும் முறையாகப் பதிவு செய்யப்படலாகாது.

2.4 பல்கலைக்கழகத்தின் மாணவரொருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு அவசியமாகக் கூடியவாறான ஆவணங்களுடன் விதிக்கப்பெற்ற படிவத்திலான விண்ணப்பத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பதிவாளர் அல்லது அந்நோக்கத்திற்காக அவராற் பெயர் குறித்து நியமிக்ககூடியவாறான வேறு அலுவலர் அத்தகைய மாணவரைப் பதிவு செய்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக்கழக இலச்சினை முறையாகப் பொறிக்கப்பட்ட **மாணவரின் புகைப்படத்தைத் தாங்கிய அடையாள அட்டையொன்றும் மாணவர் பதிவுப்புத்தகமொன்றும்** அவ்வாறு பதிவு செய்யப்பட்ட மாணவருக்கு வழங்கப்படுதல் வேண்டும். அது மாணவரின் அடையாளத்தைப் பொறுத்தவரையிலும் அதிற் கூறப்பட்ட விபரங்களின் செம்மையைப் பொறுத்த வரையிலும் இறுதியான, முடிவான சான்றாதல் வேண்டும்.

2.5 பல்கலைக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர் ஒவ்வொருவரையும் அத்தகைய அடையாள அட்டையை அல்லது மாணவர் பதிவுப் புத்தகத்தைத் தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் இதனை கல்விப் பணிக்கு குழு உறுப்பினரொருவர், அல்லது துணைவேந்தராலோ, பதிவாளராலோ அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரேனும் காண்பிக்குமாறு கேட்கும் போது அதனைக் காட்டல் வேண்டும்.

2.6 பல்கலைக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினாற் காட்டுமாறு கேட்கப்படுகையில் அத்தகைய அடையாள அட்டையை அல்லது மாணவர் பதிவுப் புத்தகத்தைப் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு மாணவராது காட்டத்தவறின் அல்லது வேண்டுமென்றே காட்டமறுத்தல் அல்லது காட்டுவதில் அசட்டை செய்தல் அத்தகைய மாணவர் இத்துணை விதிகளின் கீழ்த்தண்டிக்கப்படத்தக்க குற்றமொன்றைப் புரிந்தவராகக் கருதப்படல் வேண்டும்.

2.7 புத்தகத்தைக் காட்டத்தவறும் அல்லது மறுக்கும் பட்சத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய மாணவரைக் கட்டுக்காவலில் வைப்பதற்கும் அத்தகைய மாணவர் வதிவு மண்டபத்தில் வசிக்காதவராயின் அவர் பிரதம ஒழுக்காற்று அதிகாரி (Chief Marshal) / பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் (Chief Security Officer) முன்கொணரப்படலாம். அவர் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காகத்

துணைவேந்தருக்குச் சிரேஷ்ட மாணவ ஆலோசகர் மூலம் அந்த மாணவர் பற்றி அறிவித்தல் வேண்டும்.

2.8 அடையாள அட்டையின் அல்லது மாணவரின் பதிவுப் புத்தகத்திற் கூறப்பட்ட விபரங்கள் மாணவரின் நிலை பற்றி முதல் தோற்றச் சான்றொன்றைக் கொண்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன் இத்துணை விதிகளின் 1.1 ஆம் பட்டோலையில் விதித்துரைக்கப்பட்ட முறையிலும் இருத்தல் வேண்டும்.

2.9 1985 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1978 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பொருத்தமான பகுதிகளின் ஏற்பாடுகளுக்கு அமையாது விடின் மாணவரின் களரி, சங்கம், சமாசம் அல்லது அவை எவையும் அங்கீகரிக்கப்படுதல் ஆகாது.

2.10 அவ்வாறு உருவாக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்ற மாணவர் குழுமம் ஒன்று இதற்குப் பின்னர் பல்கலைக்கழகச் சங்கம் எனச் சுட்டப்படும்.

2.11 ஒரு பல்கலைக்கழகத்தின் சங்கம் 1985 ஆம் ஆண்டின் 07 இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்த) சட்டத்தினாலே திருத்தப்பட்டவாறு 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகளின் ஏற்பாடுகளினால் நெறிப்படுத்தப் பெறல் வேண்டும்.

2.12 சிரேஷ்ட மாணவ ஆலோசகர் மூலம் துணைவேந்தரிடம் பெறப்பட்ட அனுமதியின்றி மாணவர் ஒருவராகவோ, மாணவர் பலராலோ, சங்கத்தாலோ அவையாலோ பகிரங்கக் கூட்டம் எதுவும் நடாத்தப்படல் ஆகாது அனுமதி காலத்திற்குக் காலம் விடுக்கப்படும் அறிவித்தலில் விதிக்கப்பெற்ற முறையிற் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.13 துணைவேந்தர் அனுமதியை அளிக்கும் போது கூட்டத்திற்கான இடத்தையும் நோக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் துணைவேந்தரின் முன் சம்மதம் இன்றி கூட்டம் வேறு இடத்திலோ வேறு நேரத்திலோ நடைபெறலாகாது.

2.14 இப்பிரிவின் நோக்கங்களுக்காக பகிரங்க கூட்டம் என்பது கட்டணம் அறவிட்டோ அறவிடப்படாமலோ ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாணவர்களின் ஒன்று கூடலாக இருக்கும்.

2.15 கல்வி இயல்புடைய கூட்டமொன்றை கூட்டுவதற்கு பீடத்தலைவரோ துறைத்தலைவரோ அவரின் தற்துணிவின் படி அனுமதி வழங்கும் அதிகாரத்தைத் துணைவேந்தர் அவருக்கு கையளிப்பதன் மூலம் இவ்வேறுபாடுகளுக்குப் புறநடைகளை அனுமதிக்கலாம்.

2.16 அதிகாரமளிக்கப்படாத கூட்டமொன்றைக் கூட்டுதல் ஒழுங்கீனமான செயலெனக் கருதப்படவேண்டுமென்பதோடு அதற்குப் பொறுப்பானவர்கள் தண்டணைக்கு ஆளாதலும் வேண்டும்.

2.17 இப்பிரிவின் நோக்கங்களிற்கு அதிகாரமளிக்கப்படாத கூட்டங்களின் ஒழுங்கீனமான செயல்கள் என்பது அக் கூட்டங்கள் பற்றிய பகிரங்க அறிவித்தல்களையும் அக்கூட்டங்களுடன் தொடர்புடைய சுவரொட்டிகளையும் வெளியிடுதல், கொடிகளை அமைத்தல், கூட்டங்களை நடத்துதல் கூட்டங்களில் உரையாற்றுதல் ஆகியவனற்றை உள்ளடங்கும்.

2.18 துணைவேந்தரின் சம்மதத்தை முன்னரே பெற்றிருந்தாலன்றி பல்கலைக்கழக மாணவர் எவரிடமிருந்தும், பல்கலைக்கழக சங்கம் அல்லது ஏனைய அவையிடமிருந்தும், ஒப்பப் பணம் அறவிடலாகாது எனினும் பல்கலைக்கழக சங்கத்தின் நோக்கத்திற்கும் அதன் விதிகளுக்கும் ஏற்ப அறவிடப்படும் ஒப்பப் பணத்திற்குப் இப்பிரமாணம் ஏற்புடையதாகாது.

2.19 உடல் அல்லது உளரீதியில் எவரையாவது தொந்தரவு செய்தாலும் (எவ்வித பகிடிவதை) விரட்டலும் ஒழுங்கீனமான செயலெனக் கருதப்பட வேண்டும்.

2.20 இப் பகுதியின் நோக்கத்திற்காக விரட்டுதல் என்பது பல்கலைக்கழகச் சங்கம் ஒன்றிற்கு உரித்தற்ற பல்கலைக்கழக வளாக வளவினுள் உள்ள ஒன்றிற்கு உரித்தற்ற பல்கலைக்கழக மாணவர் (ஒருவர் அல்லது பலர்) விளம்பரங்களை ஒட்டுதல், விரிவுரைகளைப் பகிஸ்கரிக்குமாறோ வேலை நிறுத்தத்தில் ஈடுபடுமாறோ வேண்டுகோள் விடுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

2.21 பல்கலைக்கழகச் சங்கத்தைப் பொறுத்த வரையிலும் அச்சங்கம் சட்டமுறையாகக்கூடிய அத்தகைய கூட்டத்திற் பெரும்பான்மையினரின் ஆதரவு தீர்மானமொன்றை எடுத்தால் மட்டுமே செல்லுபடியாகக்கூடிய அறிவித்தல்களௌன அவற்றை அங்கீகரிக்க முடியும்.

2.22 உண்மையான உடற்காயத்தை அல்லது உடல் ஊறை ஏற்படுத்தல் அல்லது அதனை ஏற்படுத்துமாறு மிரட்டுதல் ஒழுக்காற்றைக் கடுமையான மீறுஞ் செயலென்பதுடன் தண்டிக்கப்படவேண்டிய குற்றமெனவும் கருதப்படல் வேண்டும்.

2.23 எவரேனும் ஆள் ஒருவரையோ பலரையோ கடத்தல் அல்லது கடத்த முயலுதல் அல்லது கடத்துவதற்கு அச்சுறுத்தல் கடும் ஒழுக்கக்கேடான செயலென்பதுடன் தண்டனைக்குரிய குற்றச் செயலாகவும் கருதப்படல் வேண்டும்.

2.24 பல்கலைக்கழகத்தின் சட்டமுறையான நடவடிக்கைகளை குழப்புவதற்கு மாணவர்களை தூண்டுதல் கடும் ஒழுங்கீனமான செயல் என்பதுடன் தண்டனைக்குரிய குற்றச் செயலாகவும் கருதப்படல் வேண்டும்.

2.25 பல்கலைக்கழக வளவினுள் பொருட்களைக் களவாடிய களவாட முயன்ற அல்லது பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான களவாடப்பெற்ற உடமையை வைத்திருந்த அல்லது வேண்டுமென்றே சொத்துக்கு அழிவை ஏற்படுத்திய மாணவர் ஒருவரும் தண்டனைக்குரிய குற்றமொன்றைப் புரிந்தவர் ஆவர்.

2.26 எந்தவொரு பல்கலைக்கழக ஆசிரியரும் அவரால் நடாத்தப்படும் எந்த ஒரு விரிவுரை, செய்முறை, செய்முறைக்காட்டல், கட்டுரை அல்லது புடிநிலைில் இருந்து மாணவர் ஒருவரையும் இடைநிறுத்தி வைக்கலாம். ஆனால் அவ்வாறான ஒவ்வொரு விடயத்தையும் உரிய கல்வித்துறையின் தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். அவர் அதனை பீடத்தலைவருக்கும், துணைவேந்தருக்கும் அறிவிப்பார். துணைவேந்தர் பீடத்தலைவரின் தகவுரையின்படி எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளை தீர்மானித்தல் வேண்டும்.

## 3. ஒழுங்கற்ற செயல்களை பற்றிய முறைப்பாட்டுக்குரிய விசாரணை நடைமுறைகள்.

3.1 துணைவேந்தரினாற் காலத்துக்குக் காலம் நியமிக்கப்படும் விசாரணைக்குழுவொன்று வதிவு ஒழுக்காற்று நிபந்தனைகள் குறித்து நடவடிக்கை எடுக்கும்.

1. துணைவேந்தரினாற் அவசியமெனக் கருதும் எண்ணிக்கையான உறுப்பினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், உதவிப்பதிவாளர் (மாணவ நலன்) பதவிவழி உறுப்பினராக இருப்பதுடன் அவர் செயலாளராகவும் அக்குழுவின் கூட்டத்தைக் கூட்டுபவராகவும் இருத்தல் வேண்டும்.
3. சபையின் தவிசாளரை துணைவேந்தர் நியமித்தல் வேண்டும்.

3.2 சட்டத்தினதும் வேறு பொருத்தமான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய விசாரணைக்குழு பின்வரும் தத்துவங்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும். பல்கலைக்கழக மாணவர் எவரொருவராயினும் பலரையேனும் பொறுத்தவரை அவர்களுக்கு எதிராக சுமத்தப்படும் ஒழுக்காற்றின்மை அல்லது துர்நடத்தை பற்றிய குற்றச்சாட்டுப்பற்றி விசாரணை செய்தல் அல்லது விசாரணை செய்வித்தல் அத்துடன் ஏதேனும் ஒழுக்காறின்மை அல்லது துர்நடத்தைச் செயலுக்காகக் குற்றவாளியாக்க காணப்பட்ட அல்லது இத்துணைவிதிகளின் ஏற்பாட்டிற்கு அல்லது சபையினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கு முரணாகச் செயற்பட்ட எவரேனும் மாணவருக்கு எதிராகப் பொருத்தமான தண்டணையைக் சிபார்சு செய்தல்.

3.3 பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினதும் தலைவர் பீடத்திற்குள் எல்லா மாணவரதும் ஒழுக்காறு மீது மேற்பார்வைக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் பூரணதத்துவம் அதிகாரம் உடையவராதல் வேண்டும்.

3.4 முற்போந்த பந்தியில் பீடத்தின் தலைவருக்கு அளிக்கப்பெற்ற தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக பீடத் தலைவரொருவர் அப்பீடத்தின் தகுந்த நிர்வாகத்திற்குத் தேவையெனக் கருதும் பணிப்புரைகளைக் காலத்துக்குக் காலம் விடுக்கலாம்.

3.5 பீடத்தலைவர் ஒவ்வொருவரும் அவ்வவ் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களின் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்புடையவராக இருக்கவேண்டுமென்பதுடன் பீடத்தின் கல்விப் பணிக்குழு உறுப்பினருள் எவரினதும் சேவைகளை அவரின் இணக்கத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

3.6 மாணவரொருவரை அல்லது பலரைப் பொறுத்தவரை ஒழுங்கீனமான நடத்தை அல்லது துர்ஒழுக்கம் காரணமாக அவரது பீடத்தின் சுமுகமான தொழிற்பாடு குலைந்து போகும் சாத்தியமுண்டெனப் பீடத்தின் தலைவர் திருப்தியடைகின்ற போது பின்வரும் வழிவகைகளைக் கையாள்வதன் மூலம் பீடத்தின் தொழிற்பாடு குலைவதனைத் தடுப்பதற்கான உடனடிப்பரிகார நடவடிக்கைகளை அப்பீடத்தலைவர் எடுக்கலாம்.

1. ஒழுங்கற்ற நடத்தைக்காக அத்தகைய மாணவரொருவரை அல்லது பலரைக்கண்டித்தல் அல்லது
2. பல்கலைக்கழகத்திலிருந்தோ விரிவுரைகள், கற்கைநெறிகள் முதலியவற்றிற்குச் சமூகமளிப்பிலிருந்தோ அத்தகைய மாணவரொருவரை அல்லது பலரை இடைநிறுத்துமாறு துணைவேந்தருக்கு சிபார்சு செய்தல்.
3. நடைபெறவுள்ள புடிநிலிற்கு அத்தகைய மாணவரொருவர் அல்லது பலர் தோற்றுவதனைத் தடுக்குமாறு பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு சிபார்சு செய்தல்.

3.7 இத்துணைவிதிகளின் ஏதேனும் ஏற்பாடுகளை மீறியுள்ளாரென அறிவிக்கப்பெற்ற மாணவரொருவருக்கு வழக்கத்தின் துணைவேந்தரினால் நியமிக்கப்படும் விசாரணைக் குழுவின் முன்னர் விசாரிக்கப்படுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும்.

3.8 துணைவேந்தரினால் நியமிக்கப்படும் விசாரணைக்குழு மாணவர் எவரையாவது அல்லது பல்கலைக்கழகப் பணிக்குழுவின் உறுப்பினர் எவரையாவது அழைப்பதற்குத் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளிடம் தொர்புடைய விடயங்களின் மீது விசாரணைகளை நடாத்துவதற்குத் தேவையான எத்தகைய உதவியையும் அத்தகைய மாணவர் அல்லது பணிக்குழு உறுப்பினர் அறிவிக்கும் கடப்பாடுடையவர்.

3.9 இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்ட எந்தவொரு குற்றத்தையும் புரியும் ஆளெவரும் துணைவேந்தர் குழுவின் சிபார்சுக்கேற்ப பொருத்தமான தண்டனையை விதிக்கலாம்.

3.10 வளாகத்தில் ஒழுக்காற்றைப் பேணுவதற்குத் தேவையென கருதும் பட்சத்தில் துணைவேந்தர் அவரது தற்துணிவின்படி விசாரணையை எதிர்பார்த்து அல்லது விசாரணையின் முடிவில் அல்லது வேறுநிலையில் எந்தவொரு மாணவருக்கும் பல்கலைக்கழக வளவை அவர் புக முடியாத பகுதியாகப் பிரகடனப்படுத்தல் வேண்டும்.

3.11 துணைவிதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருந்த போதும் துணைவேந்தர் தற்துணிவின்படி பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்றைப் பேணுவதற்கு அவசியமெனக் கருதும் நடவடிக்கை எதனையாவது எடுத்தல் வேண்டும்.

## 4. பொது ஏற்பாடுகள்

**4.1** இத்துணைவிதிகளின் முற்போந்த பகுதிகளில் ஏதாவது ஏற்பாடுகள் இருந்தபோதும் இத்துணைவிதிகளுக்கு மேலதிகமாக எந்நேரத்திலாவது நடைமுறையிலுள்ள வதிவு ஒழுக்காற்றுப்பற்றிய விதிகள் பிரமாணங்கள் நியதிச்சட்டங்கள் பிறஉடன்படிக்கைகள் யாவும் பொருந்துவனவாதல் வேண்டும்.

**4.2** இத்துணைவிதிகளின் முற்போந்த பகுதிகளில் ஏதாவது ஏற்பாடுகள் இருந்தபோதிலும் பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்றைப் பேணுவதற்கு துணைவேந்தர் அவரின் சொந்தத் தற்துணிவிற்கேற்ப இத்துணை விதிகளிற் குறித்துரைக்கப்படாத ஒழுக்காற்று செயலுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கலாம்.

## 5. தண்டனைகள்

5.1 எச்சரிக்கை செய்தல் அல்லது கடுங்கண்டனம்
5.2 குற்றப்பணம்
5.3 பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வளாகத்திலிருந்து இடைநிறுத்தல்.
5.4 வதிவிட வசதிகளையும் இடவசதிகளையும் விலக்கிக் கொள்ளல்.
5.5 மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் எவையேனும் நிதி நன்மைகளை உதவியை அல்லது அளிப்பை விலக்குதல். இரத்துச் செய்தல் அல்லது இடைநிறுத்துதல்.
5.6 விதிக்கப்பெற்ற காலப்பகுதிக்கு ஏதேனும் பல்கலைக்கழகத் புடிநிலைக்குத் தகைமையற்றவராக்குதல்.
5.7 விதிக்கப்பெற்ற காலப்பகுதிக்கு காலப்பகுதிகளில் ஏதேனும் பல்கலைக்கழகத் புடிநிலையின் பெறுபேறுகளை வெளியிடாது இடைநிறுத்துதல்.
5.8 பல்கலைக்கழகத்திலிருந்து அல்லது வளாகத்திலிருந்து வெளியேற்றல்.

5.9 விசாரணைக்குழுவால் தண்டனை விதிக்கப்பெற்ற எவரேனும் மாணவர் அத்தண்டனை பற்றிய குழுவின் முடிவில் இடருற்றாராயின் அத்தகைய தண்டணை அல்லது தண்டத்திற்கு எதிராகத் துணைவேந்தருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

5.10 துணைவேந்தர் மேன்முறையீடொன்றைப் பெற்றதும் மேன்முறையீடுகள் குழுவின் பரிசீலனைக்காக அதனை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

5.11 மேற்போந்த பந்தியின் நோக்கத்திற்காக மேன்முறையீடுகள் குழு துணைவேந்தரினாற் பெயர் குறித்து நியமிக்கப்படும் மூன்று ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். மேன்முறையீடுகள் குழு விதிக்கப்பட்ட தண்டனை தொடர்பாக விசாரணைச்சபையின் முடிவை மீளாய்வு செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும் என்பதுடன் தண்டனை தொடர்பாக முடிவை உறுதிப்படுத்தலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

## 6. பல்கலைக்கழகங்கள் அல்லது உயர் கல்வி நிறுவகங்களில் பகிடிவதையின் கெடுதியினைத் தடுப்பதற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டிய வழிகாட்டிகள்.

விசேடமாக மாணவர்களிடையே நல்லெண்ணத்தையும் புரிந்துணர்வையும் வளர்ப்பதற்காக நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழக முறைமையில் பகிடிவதை தொடர்ந்து இருக்கிறது. இதற்கு மாறாக இலங்கைப்பல்கலைக்கழகங்களில் மிகவும் ஆபத்தான கடுமையான மனோரீதியான மற்றும் உடல் ரீதியான இம்சைகளை பகிடிவதை ஏற்படுத்தியுள்ளதுடன் கடந்த காலங்களில் இதன் விளைவாக நிரந்தர உடல் ரீதியானதுடன் அல்லது மனரீதியானதுமான குறைபாடுகளை அல்லது மாறாக சில மாணவர்களுக்கு மரணத்தை உண்டுபண்ணியுள்ளது. இதற்கு மேலதிகமாக மிகவும் கண்டுகொள்ளக்கூடிய அதிசய சம்பவம் யாதெனில் அநேகமான சம்பவங்களில் பகிடிவதையானது சில தெரிவு செய்யப்பட்ட குழுக்கள் அல்லது வகுப்புக்களைச் சார்ந்த மாணவர்களை இம்சைப்படுத்தும் அல்லது புதிய மாணவர்களின் புத்தியில் வெவ்வேறான அரசியல் கருத்துக்களை ஊட்டும் உத்தேசம் கொண்டதாகும். மொத்தமாக பகிடிவதையினை ஊக்கமளித்தோரால் முன்வைக்கப்பட்ட சமூகமயமாக்கல் அல்லது இயற்கை மயமாக்கல் ஆகிய உரிமை கொண்டாடலுக்கு கெட்ட விளைவுகள் குறிப்பாக உயிரை அச்சுறுத்தும் நிகழ்வுகள் நீண்ட தூரத்துக்கு அத்துமீறிவிட்டன. பகிடிவதையுடன் தொடர்புபட்ட இடம்பெற்ற சம்பவங்களின் கடுமையான இயல்பு காரணமாகவும் உயர் கல்வி நிறுவனங்களுக்கு புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் காலப்பகுதியில் பகிடிவதையின் உயர்வான சம்பவித்தல் தொடர்புடைய முறைப்பாடுகள் செய்யப்பட்டதனாலும் 1998ம் ஆண்டின் 20ம் இலக்க கல்வி தலைப்பின் கீழ் ஒரு புதிய சட்டம் 1998இல் உருவாக்கப்பட்டது. குறிப்பிட்ட சட்டத்தின் விதிகளின் கீழ் பகிடிவதை என்பது ஒரு கல்வி நிறுவனத்தினது ஒரு மாணவனை அல்லது பணியாட்தொகுதியின் ஒரு அங்கத்தவரை உடல் ரீதியாக அல்லது உளவியல் ரீதியாக காயம் அல்லது மனநோவு அல்லது பயம் என்பவற்றை உண்டாக்கும் அல்லது உண்டாக்கக்கூடிய ஏதாவதொரு நடவடிக்கை.

## 7. **பகிடிவதையின் வகைகள்.**

கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே பகிடிவதை புரிகின்ற அல்லது அதில் பங்கு பற்றுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாதல் வேண்டும்.

7.1 (அ) பகிடிவதை புரிகையில் எவரேனும் மாணவருக்கு அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரொருவருக்கு பாலியல் தொந்தரவை அல்லது பாரதூரமான காயத்தினை ஏற்படுத்தல்.

7.2 (ஆ) கல்வி நிறுவனமொன்றிற்குள்ளாக அல்லது அதற்கு வெளியே எவரேனும் மாணவரின் அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரொருவரின் உடலுக்கு நற்பெயருக்கு அல்லது ஆதனத்துக்கு அல்லது பலியானவர் வேறு எந்தவொரு ஆளில் அக்கறையுடையவராக இருக்கின்றாரோ அந்த ஆளின் உடலுக்கு நற்பெயருக்கு அல்லது ஆதனத்துக்கு ஊறு விளைவிப்பதாக பலியானவரை அச்சத்துக்கு உட்படுத்தும் எண்ணத்துடன் அல்லது பலியானவர் எந்தச் செயலை செய்யுமாறு சட்டப்படி தேவைப்படவில்லையோ அந்தச்செயல் எதனையும் செய்யுமாறு அல்லது எந்தச் செயலை செய்வதற்கு பலியானவர் உரித்துடையவராக இருக்கின்றாரோ அந்த ஏதேனும் செயலை செய்யாது விடுமாறு வற்புறுத்தும் எண்ணத்துடன் வாய் மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ அச்சுறுத்தல்.

7.3 (இ) எந்தப் செயலின் மூலம் கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரின் அல்லது பணியாட் தொகுதி உறுப்பினரின் அல்லது வேறு ஆளின் சொந்தச்

சுதந்திரமும் நடமாடும் சுதந்திரமும் அத்தகைய கல்வி நிறுவனத்திற்குள்ளாக அல்லது அத்தகைய கல்வி நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கீழும் கட்டுப்பாட்டின் கீழுமுள்ள எவையேனும் வளவுகளுக்குள்ளாக சட்ட முறையான நியாயப்படுத்தல் இல்லாமலும் அத்தகைய மாணவரை பணியாட்தொகுதி உறுப்பினரை அல்லது வேறு ஆளை குறிப்பிட்டவொரு செயல்நெறிமுறையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தும் நோக்கத்திற்காகவும் தடைசெய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனும் ஆள்.

7.4 (ஈ) கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரை அத்தகைய மாணவர் அல்லது உறுப்பினர் எந்தத் திசையை நோக்கிச் செல்வதற்கு உரிமை கொண்டுள்ளாரோ அந்தத் திசையில் செல்வதை தடை செய்கின்றவாறான அத்தகைய முறையில் சட்டவிரோதமாக தடுக்கின்ற எவரேனும் ஆள்.

7.5 (உ) கல்வி நிறுவனமொன்றின் எவரேனும் மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரை குறித்த சில சுற்றுவட்ட எல்லைகளுக்கும் அப்பால் செல்வதை தடை செய்யக்கூடியவாறான அத்தகைய முறையில் அத்தகைய மாணவரை அல்லது பணியாட்தொகுதி உறுப்பினரை சட்டவிரோதமாக மறித்து வைக்கின்ற எவரேனும் ஆள்.

7.6 (ஊ) கல்வி நிறுவனமொன்றின் அல்லது முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள எவையேனும் வளவுகளை சட்டபூர்வமான காரணமின்றி பலாத்காரமாக இருப்பாட்சி கொள்கின்ற எவரேனும் ஆள்.

7.7 (எ) கல்வி நிறுவனமொன்றின் அல்லது முகாமைத்துவத்தின் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் ஆதனம் தொடர்பில் சொத்தழிவு செய்கின்ற எவரேனும் ஆள்.

7.8 எவ்வாறாயினும் புதிய மாணவர்களுக்கு அதிக பாதிப்பினையும் பொது மக்களின் ஆட்சேபனையினையும் உண்டு பண்ணும் பகிடிவதையினைத் தடுப்பதற்கு கடந்த தசாப்த காலத்தில் பல்கலைக்கழகங்களால் அல்லது உயர் கல்வி நிறுவனங்களால் மேற்படி சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன முறையாக பிரயோகிக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

7.9 1998ல் மேற்படி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அண்மைய கடந்த காலத்தில் சகல பல்கலைக்கழகங்களிலும்

7.10 அல்லது உயர் கல்வி நிறுவனங்களிலும் பல வகையான பகிடிவதைச் சம்பவங்களின் ஆபத்தான அதிகரிப்புகள் அறிக்கையிடப்பட்டும் அவதானிக்கப்பட்டும் உள்ள காரணத்தினால் மேற்படி சட்டத்திலுள்ள பிரமாணங்களை உடனடியாக நடைமுறைப்படுத்தலை உதவும் நோக்கத்துடன் பின்வரும் வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக நிறுவனங்கள் அதற்கு பொருத்தமாக கையாளப்படும் உபாயங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்களும் அல்லது நிறுவனங்களும் பின்வரும் தவிர், செய்,44 தண்டி ஆகிய நடவடிக்கைகளை 3 கட்டங்களில் கையாள்வதற்கு இத்தால் வேண்டப்படுகின்றன.

## 8. தவிர்

8.1 உயர் கல்வி நிறுவனங்களில் தங்களது பதிவுக்காலத்தில் உயர் கல்வி நிறுவனத்தினது பிரதேசத்தின் உள்ளே அல்லது வெளியே அந்த வகையான பகிடிவதையினையோ அல்லது வன்செயலினையோ அவர்கள் ஆரம்பித்தல் உதவுதல் தூண்டுதல் செய்தல் இல்லையென குறிப்பிட்டு ஒரு பிரகடனத்தில் மாணவர்கள் கட்டாயமாக கையெழுத்திடுவதுடன் பெற்றோரால் அல்லது பாதுகாவலரால் உறுதிக் கையெழுத்திடப்படல் வேண்டும்.

8.2 சகல பல்கலைக்கழகங்கள் அல்லது உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் உபவேந்தர் மற்றும் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பேரவை உறுப்பினர் புரொக்ரர் இருப்பின் பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி மாணவ ஆலோசகர்கள் உதவி விடுதிப் பொறுப்பாளர் ஆகியோரை உள்ளடக்கியதும் சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (மாணவ நலன்கள்) அவர்களையும் இணைப்பாளராக கொண்ட பகிடிவதைக்கு எதிரான குழுவொன்றை நியமித்தல் இக்குழு தயார்படுத்தல் மற்றும் உச்ச கால மாதத்தில் இரு தடவையில் கூடுவதுடன் பேரவைக்கு ஒழுங்காக அறிக்கையிடல் வேண்டும்.

9. தனிப்பட்ட பல்கலைக்கழகளின் அல்லது உயர் கல்வி நிறுவனங்களின் தேவைக்கேற்ப பீட மட்டத்தில் பகிடிவதைக்கு எதிரான குழுக்களை ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழகங்கள் உயர் கல்வி நிறுவனங்கள் உற்சாகப்படுத்தப்படுகின்றன.
   9.1 பகிடிவதை என கருதப்படும் செயல்களையும் அத்துடன் இச்சட்டத்தின் பிரமாணங்களின் கீழ் வழங்கப்படும் தண்டனைகளையும் விபரிக்கும் கையேடு ஒன்றைத் தயாரிக்கவும்.
   9.2 20-25 மாணவர்களுக்கு மேற்படாத எண்ணிக்கைக்கு ஒரு தற்காலிக மாணவ ஆலோசகர் (TSC) என்ற அடிப்படையில் தற்காலிக மாணவ ஆலோசகர்களாக குறைந்தது 3 மாதம் அல்லது மேற்பட்ட தரத்தில் இருந்து நியமித்தல் வேண்டும்.
   9.3 சட்டத்திலுள்ள பிரமாணங்கள் உட்பட பகிடிவதையின் சகல விடயங்களையும் எல்லாத் துறைத் தலைவர்களும் மற்றும் பொறுப்பான பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவு புகட்டப்படல் வேண்டும்.
   9.4 பகிடிவதை தொடர்பாக எடுக்கப்பட்ட சகல நடவடிக்கைகளின் விளம்பரங்கள் வாசிகசாலைகள் மாணவர் சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தொடர்புள்ள விளம்பரப் பலகைகள் போன்ற கவனத்தை ஈர்க்கும் இடங்களில் காட்சிக்கு வைக்கப்படல் வேண்டும்.
   9.5 தடுப்பு நடவடிக்கைகள் மீதான விவரமான தகவல்கள் சகல பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   9.6 சட்டத்தினது முக்கிய பகுதிகள் பற்றி சகல பெற்றோர்களுக்கும் புதிதாக நுழைபவர்களுக்கும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.
   9.7 பகிடிவதையின் பலன்களை பற்றி சிரேஷ்ட மாணவர்களுக்கு அறிவூட்டப்படல் வேண்டும்.
   9.8 சிரேஷ்ட மாணவர்கள் விடுமுறையிலிருக்கும் போது புதிய மாணவர்களை அனுமதித்தல்.
   9.9 எந்த வகையான பகிடிவதைக்கும் உட்பட்டால் பின்பற்றப்படவேண்டிய காரியக் கிரமம் மற்றும் முக்கியமான இருப்பிடங்கள் மீதான அவர்களை அறிவூட்டுவதற்காக புதிய மாணவர்களுக்கான மாறுபட்ட சூழ்நிலைக்கான பயிற்சி அல்லது பரிச்சயமாக்குதல் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நடாத்துதல்.
   9.10 உயர் கல்வி நிறுவனங்களினது உடனடி சுற்றுபுறத்தில் மற்றும் 24 மணி நேரமும் விழிப்பான நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காக வேலை நேரத்தின் பின்பு அல்லது வார இறுதி நாட்களில் சமூகமளிப்பதற்கு சகல தொடர்புடைய அலுவலர்களும் உற்சாகப்படுத்தல் வேண்டும்.
   9.11 பகிடிவதை இடம்பெறக்கூடிய இடங்கள் மற்றும் காலப்பகுதி என்பவற்றை உள்ளூர் காவல்துறையினருக்கு தொடர்ந்து அறியத்தரவும்.
   9.12 பகிடிவதையினை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி பொதுசன ஊடகங்களுக்கு தொடர்ந்து அறியத் தரவும்.
   9.13 பல்கலைக்கழக சுற்று வட்டாரத்தினுள் நீண்ட மணித்தியாலங்களுக்கு விருப்பத்தின் பேரில் அல்லது சுழற்சி முறை அடிப்படையில் மாணவர் ஆலோசகரும் உதவி விடுதிப் பொறுப்பாளர்களும் சமூகமளித்திருக்க உற்சாகப்படுத்தவும்.
   9.14 பல்கலைக்கழக சுற்றாடல் மற்றும் கலாசாரத்துடன் பரிச்சயமாகிக் கொள்வதற்கு புதிய மாணவர்களுக்கான ஒரு பாதுகாப்பான மற்றும் மாணவர் நட்புச் சுற்றாடலினை வழங்கக்கூடிய புதுமையான பல்கலைக்கழகம் குறித்த நிகழ்ச்சித்திட்டம் அல்லது செயல்களை ஆரம்பித்தல்.

10. **பகிடிவதையின் நிகழ்வின் போது பின்பற்ற வேண்டிய காரியக்கிரமம்**
   10.1 பகிடிவதை தொடர்பாக சகல முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படுவதுடன் திறந்த முறைப்பாடுகள் அல்லது தேவைப்படின் இரகசியமான அடிப்படையின் கீழ் புகார் செய்வதற்கு வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.
   10.2 எழுத்து மூலமான முறைப்பாடுகள் ஸ்தூல சாட்சியங்கள், காயங்கள், சாட்சியங்கள் சூழ்நிலையிலிருந்து அனுமானிக்கப் பெறல் நாடாப் பதிவு செய்யப்பட்ட (Audio) மற்றும் புகைப்படங்கள் (Vedio) போன்ற சாத்தியமானளவு அதிகமான சாட்சியங்களை சமர்ப்பிக்க ஊக்குவித்தல்.
   10.3 1998ன் 20ம் இலக்க பகிடிவதை சட்டத்தின் கீழ் பின்பற்றப்பட வேண்டிய சம்பந்தமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சகல வழக்குகளும் புகார் செய்யப்படல் வேண்டும்.
   10.4 மருத்துவ அல்லது மனநோய் மருத்துவ பரிசோதனை ஆலோசனை பெறல் மற்றும் தேவைப்படின் மருத்துவ அறிக்கைகள் கோரல்.

10.5 ஆபத்தான காயங்கள் அல்லது தண்டணைக்குரிய சட்டத் தொகுப்பில் மற்றும் சித்திரவதைக்கு எதிரான மரபொழுங்கில் குறிப்பிடப்பட்டவாறான தண்டனைக்குரிய செயல்கள் மற்றும் 1994ன் 22ம் இலக்க தண்டனைச் சட்டத்தின் ஏனைய கொடுமையான மனிதத் தன்மையற்ற அல்லது தரக்குறைவாக நடாத்தல் என்பனவாக இருந்தால் பொலிசில் புகார் செய்தல் வேண்டும்.

10.6 பகிடிவதையின் விளைவாக பல்கலைக்கத்துக்கு அல்லது பொதுச் சொத்துக்கு ஏற்பட்ட சேதங்களின் விபரங்கள் பெறப்படல்.

10.7 1998ன் 20ம் இலக்க பகிடிவதையினைத் தடை செய்தல் சட்டத்தினில் குறிப்பிடப்பட்டுள்ள காரியக் கிரமங்களை பின் தொடர்தல்.

10.8 புதிய மாணவர்களை பதிவு செய்து முதல் மூன்று காலப்பகுதியில் ஒவ்வொரு கிழமை அடிப்படையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு பகிடிவதையின் சகல சம்பவங்களையும் 1998ன் 20ம் இலக்க பகிடிவதையினை தடை செய்தல் சட்டத்தின் அடிப்படையின் மேல் வழங்கப்பட்ட தண்டனைகளையும் அறிவித்தல்

11. **தண்டனை**

மேற்படி சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட அனேகமான குற்றங்கள் ஜாமீனில் அல்லது பிணையில் விடத்தகாதவை என்பதுடன், பத்து வருடங்கள் வரையிலான கடுமையான சிறைவாசகத்துக்கான சட்டக் கட்டுப்பாட்டுக்கு உள்ளானது என அழுத்திக் கூறப்படுகிறது. மேலும் மேற்படி சட்டத்தின் நிபந்தனையின் கீழ் ஒரு மாணவன் குற்றவாளியாகக் காணப்படின் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட முடியும் என்பதுடன், மேலும் சொத்துகளுக்கு ஏதாவது சேதம், பாதிக்கப்பட்டவருக்கு உண்டாக்கப்பட்ட காயங்களுக்கு நஷ்டஈடு செலுத்துவதற்கு பொறுப்புள்ளவராவார்.

12. **தேர்வுக் குற்றங்கள் தவிர்ந்த ஏனைய குற்றங்கள் பற்றிய ஒழுக்காற்று விசாரணைகள் தொடர்பான வழிகாட்டிகள்**

**குற்றச்சாட்டு**

12.1 ஒழுங்கின்மைச் செயல் ஒன்று பற்றி கல்வி பணித்தொகுதி உறுப்பினரொருவராலோ நிருவாக அலுவலரொருவராலோ மாணவரொருவராலோ எழுத்திலான முறைப்பாடொன்று பதிவாளரிடம் செய்யப்படலாம்.

12.2 புதிவாளர் அத்தகைய முறைப்பாடொன்றைப் பெற்றதன் பின்னர் முதல் தோற்றத்திலேயே ஒழுங்கு மீறல் ஒன்று காணப்படுமானால் முறைப்பாடு செய்யப்பட்ட மாணவனுக்கு எதிராகக் குற்றப் பத்திரமொன்றை வழங்குதல் வேண்டும்.

12.3 குற்றச்சாட்டு இலகுவாகவும் தெளிவாகவும் மாணவரறிந்த அரசகரும மொழியில் எடுத்துரைக்க வேண்டும்.

12.4 எனினும் ஆங்கில மொழியிலேயே குற்றப்பத்திரம் வழங்கப்பட வேண்டுமென மாணவர் வேண்டிக்கொண்டால் அவ்வேண்டுகோளுக்கிணங்கிச் செயற்பட வேண்டும்.

12.5 குற்றப்பத்திரம் மாணவரின் வீட்டு விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

12.6 கல்வித் தவணைக் காலத்தில் வேறொரு முகவரியிலேயே தான் வசிப்பதாக மாணவர் தெரிவித்திருந்தால் குற்றப்பத்திரத்திரத்தின் பிரதி ஒன்றைப் பதிவுத் தபாலில் அம்முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

13. **விசாரணையின் ஆரம்பம்**

13.1 துணைவேந்தர் தமது கைப்பட எழுதி விசாரணையை நடாத்துவதற்காக விசாரணை அலுவலரை அல்லது அலுவலர்களை நியமித்தல் வேண்டும்.

13.2 கடுமையான ஒழுங்கு மீறல் குற்றச்சாட்டுப் பற்றிய விசாரணை வழக்கமாக 3 அலுவலரைக் கொண்ட ஆயத்தினாலேயே நடாத்தப்படல் வேண்டும்.

13.3 விசாரணை அலுவலர் அல்லது அலுவலர்கள் குற்றப்பத்திரத்திரத்தின் பிரதி ஒன்றைப் பெற்று கொண்டதன் பின்னர் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவித்து விசாரணைக்காக தேதியொன்றையும் நேரத்தையும் குறித்து அனுப்புதல் வேண்டும். இத்திகதி குறைந்த பட்சம் 2 கிழமை இடைவெளியை கொண்டிருத்தல் வேண்டும்.

**14. சமூகமளிக்காமை**

14.1 விசாரணைக்கான தேதியும் நேரமும் அறிவிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் சமூகமளிக்காமல் விசாரணையை பிற்போடுமாறு எழுத்தினாலான வேண்டுகோளொன்றை செய்திருப்பின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது நியாயமானதாயின் அத்தகைய வேண்டுகோளுக்கு இணங்க செயற்படுதல் வேண்டும்.

14.2 அத்தகைய வேண்டுகோள் எதுவுமின்றி அல்லது விளக்கமெதுவும் அளிக்காமல் சமூகமளிக்காமல் விட்டால் நியாயமான சூழ்நிலைகளில் விசாரணையில் கலந்து கொள்வதற்காக மாணவருக்கு மேலும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பத்தில் விசாரணை ஆரம்பிப்பதற்காக குறிக்கப்பட்ட திகதியையும் நேரத்தையும் பதிவுத்தபால் மூலம் அவருக்கு அறிவித்தல் வேண்டும்.

**14.3** குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் திருப்திகரமான விளக்கம் எதுவுமின்றி தொடர்ந்து சமூகமளிக்காமல் விட்டால் ஒரு தரப்பான விசாரணை நடைபெறுதல் வேண்டும்.

**15. பிரதிநிதித்துவம்.**

15.1 விசாரணையொன்றில் மாணவரொருவருக்காக வேறோர் ஆள் அவரின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ள அனுமதியளிக்கப்படலாகாது.

15.2 எனினும் மாணவர் ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர் ஒருவரை விசாரணையொன்றில் பார்வையாளராக அமர்த்த விரும்பினால் அதனை அனுமதிக்கலாம். பார்வையாளர் விசாரணையிற் பிரசன்னமாயிருக்கும் உரித்துடையவராயினும் விசாரணை நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் கலந்து கொள்ளும் உரிமையற்றவராவார்.

**16. விசாரணையை நடாத்துதல்.**

16.1 விசாரணை செய்யும் அலுவலர் அல்லது விசாரணை செய்யும் அலுவலர்களில் ஒருவர் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கு குற்றம் அல்லது குற்றங்களை வாசித்து காட்டுதல் வேண்டும்.

16.2 குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கு குற்றத்தை வாசித்து காட்டும் போது முறைப்பாடு செய்தவரின் அல்லது செய்தவர்களின் பெயரையும் அல்லது பெயர்களையும் அவரின் அல்லது அவர்களின் சாட்சிகளின் பெயர்களையும் கொண்ட பட்டியலொன்றை அளித்தல் வேண்டும்.

16.3 விசாரணை செய்யும் அலுவலர் அல்லது விசாரணை ஆயத்தின் தவிசாளர் மாணவர் குற்றவாளியென ஒப்புக்கொள்கிறாரா இல்லையா எனக் கேட்டல் வேண்டும்.

16.4 அவர் தாம் குற்றவாளியென ஒப்புக்கொண்டால் குற்றத்தின் கடுமையை தணிக்கும் சந்தர்ப்பங்கள் எவையேனும் உண்டென நிறுவ இயலுமா என்று கேட்டல் வேண்டும்.

16.5 மாணவர் தாம் குற்றவாளியென ஒப்புக்கொள்ளாவிட்டால் விசாரணை செய்யும் அலுவலர் விசாரணை செய்யும் ஆயம் முறைப்பாட்டாளரின் சாட்சியங்களையும் சாட்சிகள் எவராவது இருப்பின் அவர்களின் சாட்சியங்களையும் பதிவு செய்தல் வேண்டும்.

16.6 அதன் பின்னர் விசாரணை செய்யும் அலுவலர் விசாரணை செய்யும் ஆயம் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவரின் சாட்சியங்களையும் அவரின் சாட்சிகள் எவராவது இருப்பின் அவர்களின் சாட்சியங்களையும் பதிவு செய்தல் வேண்டும்.

16.7 விசாரணை செய்யும் அலுவலர் விசாரணை செய்யும் ஆயம், பின்னர் தமது தற்றுணிவின்படி வேறு எந்தவோர் ஆளையும் விசாரணை செய்யலாம்.

16.8 குறுக்கு விசாரணையை உரிமையாகப் பெறும் உரித்தெதுவுமில்லை. ஆனால் விசாரணை செய்யும் அலுவலர் அல்லது ஆயத்தின் தற்றுணிவின் பேரில் குறுக்கு விசாரணை அனுமதிக்கப்படலாம்.

16.9 விசாரணையின் எல்லா நடவடிக்கைகளும் சொல்லுக்கு சொல் பதிவு செய்யப்பட்டுப் பேணப்படல் வேண்டும்.

16.10 முறைப்பாட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் மற்றும் வேறு எந்தவொரு ஆள் ஆகியோரின் சாட்சியங்களை பெற்றுகொண்டதன் பின்னர் விசாரணை நடவடிக்கைகளின் பூரண பதிவு முறைப்பாட்டாளருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

16.11 விசாரணை அதன் பின்னர் ஒத்தி வைக்கப்படல் வேண்டும் என்பதுடன் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் அனுப்பி 7 நாட்களுக்குக் குறையாததும் 14 நாட்களுக்கு மேற்படாததுமான காலத்துள் திரும்பவும் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

16.12 விசாரணை மீள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முறைப்பாட்டாளருக்கும் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவருக்கும் பதிலளிப்பதற்கான உரிமை அளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் இறுதியான வாக்குமூலமொன்றை அளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**17. அச்சுறுத்தல்.**

17.1 முறைப்பாட்டாளர்களை சாட்சிகளை அல்லது விசாரணை செய்யும் அலுவலர்களை அச்சுறுத்துவது அல்லது அச்சுறுத்த முயல்வது ஒரு கடுமையான குற்றமாவதுடன் பல்கலைகழகத்திலிருந்து நீக்கப்படும் தண்டனை இக்குற்றத்திற்காக வழங்கப்படலாம்.

17.2 குற்றப் பத்திரத்துடன் மேற்படி விடயம் தொடர்பாக பதிவாளரின் ஐயத்துக்கிடமற்ற கூற்றொன்றும் இணைக்கப்பட்டிருத்தல வேண்டும்.

**18. முடிவுகள்.**

18.1 விசாரணை செய்யும் அலுவலர் அல்லது ஆயம் விரிவான முடிவுகளை எழுத்திலே தெரிவிக்க வேண்டும் என்பது சட்ட உரிமைக் கட்டளையன்று. ஆனால் நிரூபிக்கப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில் முடிவுகளுக்கான காரணங்களை உள்ளடக்கி சுருக்கமான அறிக்கையொன்றை தொகுத்தளிப்பது விரும்பத்தக்கதாகும்.

18.2 அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள முடிவுகளில் விசாரணை அலுவலர் அல்லது ஆயம் குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் சாட்டப்பட்ட அக்குற்றங்களுக்கு குற்றவாளியா இல்லையா என்பதனை நிச்சயமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

18.3 குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் தம்மீது சாட்டப்பட்ட குற்றங்களுக்கும் குற்றவாளியாகக் காணப்படாமல் இருக்கலாம். ஆனால் அதிலும் குறைவான குற்றத்திற்குக் குற்றவாளியாகலாம்.

18.4 விசாரணை செய்யும் அலுவலர் அல்லது ஆயம் தம் அறிக்கையைத் துணைவேந்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**19. தண்டனை.**

19.1 குற்றஞ்சாட்டப்பட்ட மாணவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் முழுமையான சந்தர்ப்பத்தையும் கவனத்திற் கொண்டு வழங்கப்படவேண்டிய தண்டனையின் இயல்பையும் தரத்தையும் பற்றி விசாரணை செய்யும் அலுவலர் அல்லது ஆயம் தம் சிபார்சை செய்தல் வேண்டும்

19.2 பல்கலைக்கழக மூதவையின் சிபார்சின் பேரில் பொருத்தமான தண்டனையை துணைவேந்தர் வழங்குதல் வேண்டும்.

19.3 உள்நிலை ஒழுக்காற்று விசாரணைகளின் அறிக்கையையும் அவற்றிலிருந்து பெற்ற முடிவுகளையும் முன்மொழியப்பட்ட தண்டனைகளையும் விசாரணை செய்யும் அலுவலர்களின் தகவலின் பொருட்டு பதிவாளரின் அலுவலகம் பேணி வைத்தல் வேண்டும்.

## 9. முக்கிய தொலைபேசி இலக்கங்கள் -யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

| | |
|---|---|
| துணைவேந்தர் | 0212222294 |
| நூலகம் | 0212222970 |
| பதிவாளர் | 0212222006 |
| நிதியாளர் | 0212229603 |
| தலைவர்/ வவுனியா வளாகம் | 0242222264 |
| பீடாதிபதி/விவசாயபீடம் | 0212060175 |
| பீடாதிபதி/கலைப்பீடம் | 0212223091 |
| பீடாதிபதி/பொறியியற்பீடம் | 0212062160 |
| பீடாதிபதி/இலக்கியபீடம் | 0212223608 |
| பீடாதிபதி/முகாமைத்துவ கற்கையும் வணிகமும் | 0212223610 |
| பீடாதிபதி/மருத்துவபீடம் | 0212222073 |
| பீடாதிபதி/விஞ்ஞானபீடம் | 0212222655 |
| சிரேஷ்ட உதவி நிதியாளர் | 0212224679 |
| பதில் பதிவாளர் தாபனக் கிளை (கல்விசார்) | 0212226715 |
| பதில் பதிவாளர் / பரீட்சைகள் | 0212223609 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் தாபனக் கிளை (கல்விசாரா) | 0212228566 |
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/நிர்வாகக்கிளை | 0212226517 |
| உதவிப் பதிவாளர் (கல்விசார்) | 0212226500 |
| உதவிப் பதிவாளர் (அனுமதி | 0212226714 |
| உதவிப் பதிவாளர் (நலன்புரி) | 0212226716 |
| மாணவ ஒழுக்காற்று அதிகாரி | 0212229668 |
| சிரேஷ்ட மாணவ ஆலோசகர் | 0212229668 |
| உள்ளக கணக்காய்வாளர் | 0212226518 |
| பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி | 0212226519 |
| வேலைப்பகுதி பொறியியலாளர் | 0212226516 |
| பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் | 0212228862 |
| பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம | 0212223744 |
| சித்தமருத்துவ பீடம் | 0212057146 |
| பெண்கள் விடுதி கைதடி | 0212057144 |
| ஆண்கள் விடுதி கைதடி | 0212057145 |

# 10. Mentors List

| Group - I<br>Mentor - Dr.(Mrs.)Thileepan (0770556790) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Ali Akber Afrose Sheema | 2023/SID/003 |
| 2 | Miss | Aloysius Florina | 2023/SID/004 |
| 3 | Miss | Ameer Fathima Ushama | 2023/SID/005 |

| Group - II<br>Mentor – Dr.(Mrs.)A.Sritharan (0777110619) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Anantharasa Athisaya | 2023/SID/006 |
| 2 | Miss | Chandrakanthan Pavithira | 2023/SID/008 |
| 3 | Miss | Indrakumar Yansika | 2023/SID/010 |

| Group - III<br>Mentor – Dr.(Mrs.)V.Sathiyaseelan (0716222529) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Mr | Jeyamohan Sanmugapriyan | 2023/SID/011 |
| 2 | Miss | Jeyanthakumar Logitha | 2023/SID/012 |
| 3 | Miss | Kirupakaran Vaishnavi | 2023/SID/015 |

| Group - IV<br>Mentor – Dr.(Mrs.)V.M.Prasad (0772891404) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Mohammed Saleem Ayisha Rafa | 2023/SID/023 |
| 2 | Miss | Naguleswaran Mathuranga | 2023/SID/026 |
| 3 | Miss | Nawfar Fathima Rusdha | 2023/SID/027 |
| **Group - V**<br>**Mentor - Dr.(Mrs.)K.Southararajan (0779787922)** | | | |
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Parathithasan Arthika | 2023/SID/029 |
| 2 | Miss | Patpanathan Keshani | 2023/SID/030 |
| 3 | Miss | Pirathadshanamoorththi Jarusana | 2023/SID/031 |

| Group - VI<br>Mentor – Dr.(Ms.)V.Sanmugarajah (0777490634) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Royfranklin Renujana | 2023/SID/034 |
| 2 | Miss | Saravanapavan Lukshana | 2023/SID/035 |
| 3 | Mr | Sirikesan Thuliksan | 2023/SID/036 |

| Group - VII<br>Mentor – Dr. (Mrs.)N.Nithiyakumar (0766162069) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Mr | Sivakumar Sivahajan | 2023/SID/038 |
| 2 | Miss | Sivasothilingam Dilaxana | 2023/SID/039 |
| 3 | Miss | Sowntharraj Shakshikka | 2023/SID/040 |
| **Group - VIII**<br>**Mentor – Dr.(Mrs.)S.Sivarajah (0776669962)** | | | |
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Thankavelu Baveena | 2023/SID/043 |
| 2 | Mrs | Victor Immanuvel Vithusha | 2023/SID/045 |
| 3 | Miss | Viginthan Dalshika | 2023/SID/046 |
| **Group - IX**<br>**Mentor – Dr. (Ms.) S.Sivagnanam ( 0779527197)** | | | |
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Ashar Nuha Mariyam | 2023/SID/048 |
| 2 | Miss | Ganeshamoorthy Thuruziya | 2023/SID/050 |
| 3 | Miss | Haleem Fathima Hatheekka | 2023/SID/051 |

| Group - X<br>Mentor - Dr. .(Mrs) N.Sivaram (0707234905) | | | |
|---|---|---|---|
| **No** | **Title** | **Full Name** | |
| 1 | Miss | Navaneethan Nivethika | 2023/SID/054 |
| 2 | Miss | Pirathirasa Varshika | 2023/SID/055 |
| 3 | Miss | Riyamdeen Ramla Begam | 2023/SID/056 |
| **Group - XI**<br>**Mentor – Dr.(Mrs)R.Sugeevan ( 0778144598)** | | | |
| 1 | Miss | Samsudheen Fathima Aqeela | 2023/SID/057 |
| 2 | Miss | Sathiyanathan Vipusarani | 2023/SID/058 |
| 3 | Miss | Thavachelvam Pavithra | 2023/SID/059 |
| **Group - XII**<br>**Mentor – Dr.(Mrs)S.Krishna ( 0770869862)** | | | |
| 1 | Miss | Paramasivam Arichana | 2023/SID/060 |
| 2 | Miss | Vijayaretna Atshaya | 2023/SID/061 |
| 3 | Mrs | Abdul Raseethu Fatima Rasna | 2023/SID/062 |
| **Group - XIII**<br>**Mentor – Dr(Mrs)R.Miraaj (0770166435)** | | | |
| 1 | Miss | Ansar Athifa | 2023/SID/063 |
| 2 | Mr | Senthilnesan Barathkrushna | 2023/SID/064 |
| 3 | Miss | Ahamed Fathima Sharafa | 2023/SID/065 |
| 4 | Miss | Amirthalingam Shiromi | 2023/SID/066 |

| | | | |
|---|---|---|---|
| 5 | Miss | Husain Sahnas Begam | 2023/SID/067 |
| 6 | Miss | Jamal Asma Begam | 2023/SID/069 |
| 7 | Miss | Gnanaruban Jelani | 2023/SID/070 |
| 8 | Mr | Jesmin Mohamed Wazeem | 2023/SID/071 |
| 9 | Miss | Mohamad Nisthar Pathima Nisla | 2023/SID/072 |
| 10 | Miss | Mohamed Faizal Fathima Zainab | 2023/SID/073 |
| **Group - XIV**<br>**Mentor – Dr(Mrs)N.Roshana (0765380826)** | | | |
| 1 | Miss | Mohammad Rasik Parid Pathima Chamla | 2023/SID/074 |
| 2 | Mr | Nithiyaharan Tharun | 2023/SID/075 |
| 3 | Miss | Ramanathan Moosika | 2023/SID/076 |
| 4 | Mr | Richard Reynolds Babicigan | 2023/SID/077 |
| 5 | Miss | Rousdeen Fathima Aysha | 2023/SID/078 |
| 6 | Miss | Balachandran Sabitha | 2023/SID/079 |
| 7 | Miss | Mohamed Rizvi Fathima Rujila | 2023/SID/080 |
| 8 | Miss | Mubarak Mushrifa Haany | 2023/SID/081 |
| 9 | Miss | Pusparasha Nivethiny | 2023/SID/082 |
| 10 | Miss | Balasubramaniyam Pathmashanthi | 2022/SID/081 |

## சித்த மருத்துவ அலகில் வருடந்தோறும் இடம்பெறும் நிகழ்வுகள்

சுற்றாடல் தினம்
மூலிகை மர நடுகை தினம்
சித்தர்(அகத்தியர்) தினம்
சர்வதேச யோகா தினம்
போஷாக்கு தினம்
உலக நீரிழிவு தினம்
சித்த மருத்துவ வாரம்
இலவச மருத்துவ முகாம்
கல்விச் சுற்றுலாக்கள்

## கலாசார நிகழ்வுகள்

தைப்பொங்கல்
புது வருடம்
நோன்புப் பெருநாள் நிகழ்வு
நவராத்திரி நிகழ்வு
ஒளி விழா

## திருத்தாக்கற் குழு

1. வைத்திய கலாநிதி (திருமதி)விவியன்.சத்தியசீலன் பீடாதிபதி - சித்த மருத்துவ பீடம்.
2. வைத்திய கலாநிதி (திருமதி).சு.கிருஷ்ணா, மாணவ ஆலோசகர், சித்தமருத்துவ பீடம்.
3. வைத்திய கலாநிதி (திருமதி).வி.மிலானோ பிரசாத், மாணவ ஆலோசகர், சித்தமருத்துவ பீடம்.

வெளியீடு :
சித்தமருத்துவ பீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கைதடி
இலங்கை.